
ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

# கர்னன்

# சண்டை நாடகம்



கூடலூர் தாலுக்கா திருத்துறையூர் குறத்தி கிராமம்

**வை. வீரப்படையாட்சி அவர்கள் எழுதி**

C. A. சிவபூஷண முதலியார் வெளியிட்டு வந்ததை

அவரிடம் சர்வ சுதந்தரமும்பெற்று

அமரம்பேடு-இராஜரத்தின முதலியாரால்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

…ிப்பிக்கப்பட்டது.

…ட்] 1949 [அணா 10

…டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13
MADRAS

0,892NVP3,K
N49
103813

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# கர்னன் சண்டை நாடகம்

## விக்கினேஸ்வரர் கவி

வேதமோது மறையோருக்கும் வில்லுயபருசருக்கும்
நீதில்லாவசியருக்கும் திறதியம்போரே சொல்லும்
மேதினிவேளாளர் செய்யில் விளவுபோர் இன்னுட்டிற்கும்
காதலான் முதலோன்விக்கின கணபதி வருகின்றூரே.

## விக்கினேஸ்வரர் தரு

பல்லவி

வீரமுக சுந்தரர் வந்தார் சபையை நாடி வீ

அநுபல்லவி

பாரிலுள்ளோர் மகிழ பாசாங்குசமிலங்க
வாரியேபூமலர் மகிழ்ந்து தேவர் சொரிய வீ

சரணங்கள்

ஐந்துகரமிலங்க ஆனைமுகம் துலங்க
கந்தவேலர்க்கு மூத்தோன் கணபதி சபையைநாடி வீ

காலினிற் சிலம்புதண்டை கலீர்கலீரென்ன
கையினில் அங்குசபாசம் தகதகதகவென்ன வீ

முக்கண்ணுடையவர் மூஷிகவானவர்
கைக்கனிக்காகவே கடவுள்வலம் வந்தவர் வீ

## கட்டியன் கவி

பாரத உத்தரங்கள் பதினேழாம் போரில் சண்டை
நேரதாதுரியன் வாசல் நிலைபெரும் குருக்ஷேத்திரம் தான்
தாரணி அரிய ஐவர் சயம்செய மென்றுசொலவே
காரணமறியக் கட்டியக் காரனும் வருகின்றேனே.

கட்டியன் தரு பல்லவி

வந்தான்விருது கட்டியக்காரன் சுந்தரமாக
வாரான்விருது கட்டியக்காரன் வந்

அநுபல்லவி

வந்தான் கட்டியக்காரன் வாகுவல்லயம் மின்ன
சிந்தைமிகமகிழ்ந்து சேகுருசுந்தரியென்ன வந்

முருக்குமீசையும் நல்ல முகத்தில் பொரிபறக்க
அறிக்கைசொல்லியே சபை அதட்டிகையமர்த்தியே வந்

கரத்தில் வாளுமிலங்க தரித்தநாமம் துலங்க
சிரத்தில்பாகையிலங்க பரித்தகாவி குலுங்க வந்

கச்சையிருந்துகட்டி கருங்கச்சை சுங்குவிட்டு
அச்சமில்லாசேனையை அதட்டிகெக்கலிகொட்டி வந்

கட்டியன் வசனம்

அகோ கேளுங்கோள் சபையோர்களே இன்று பதினேழாம் நாள் உத்தமாகையால் துரியோதன மகாராசன் கொலுவில் வருகின்றார்.

துரியோதனன் கவி

அலைகடல்சூழ்புவி யுலகம்பதினாலும்போற்ற
அன்பத்தார்தேசமன்னர் வந்துவாழ்த்த
பிலமுடையதம்பிமார்கள் யிருபால்சூழ
பின்னிலுமாய்முன்னிலுமாய் அணிவகுத்து
தலமுடையஐவர்களை இன்றுநாளிற்
சாதிப்பேன்என்று பலவிருதுகூறி
வலுமையுடதுரியனுமே எழுந்திருந்து
வந்தமர்களம்தனிலே கொலுவதானான்.

துரியன் தரு.

திசைக்கும்புகழும்கீர்த்தி வசைக்கும் பிரபல்லியதீரன்
துரியராசனும்வந்தேதனே போர்களம்தன்னில்
அரசுக்குபிலம் தந்தேதனே
ஐவர்எனக்குயீடோ அதஞ்செய்குவேனின்றேடே

சு அண்டபுவனம்ரெண்டு மொன்றதாய்
சண்டமாருதம்போர்களம் தன்னில்

கொண்டல்பேரிகை குமறிமுழங்கிட
இன்றுவிசையனை கொன்றுமுடிக்குறேன்
இளைஞர்க்கும் பகைவர்க்கும்
எவர்க்குமதிக கர்த்தன் திசைக்கும்
அடர்ந்துசண்டை செய்வோர்கள்
அதின்பலர் ஒருகோடி
அதிலேஅமலுசெய்து இருப்பவர்ஒருகோடி
அண்டத்தனைவர்களை தெண்டித்திடுவோர்கோடி
ஆயுதபரிசைகள் விருதுமன்னவர்கோடி
அதிரதர்மகாரதர் சமரதர்ஒருகோடி
ஆண்மைக்குணமுடைய வீரர்கள்ஒருகோடி
அரவக்கொடிபிடிக்கும் சதூரங்கள்முக்கோடி
திரிச்சங்குதிரிச்சன்னம் முரசங்கள்ஒருகோடி
பெரிதும்பேரிகைடங்கா நரசிங்கிடுகுகொம்பு
வரிசைதாள்ங்கள்பங்கா கர்ன்னபூரிகைபம்பை
உடுக்கைஒருபுறங்கள் அடிக்கத்தொனிமுழங்க
எதிரிக்கும்வயிரிக்கும் எவர்க்கு மதிகர்த்தன் திசைக்கும்

## துரியன் வர்சாப்பு

அங்கணர்வங்கணர் கொங்கணர்சேனைகள்
அணியொருபுறமா கிலுைம்
சிங்களர்சீனகர் மகதேசமன்னவர்
திருத்தமாயொருபுறம் நிருத்திவிடுவீர்
மங்களமாளுவர் மலையாளர்சேனைகள்
மத்திறபூபதிதனம் வந்தனர்களா
இங்கள்ளசேனைகள் தங்கள் தன்படையோடு
இன்பமாய் வந்தனர்களோ.

## துரியன் வசனம்

ஆகா வாருங்கோள் மந்திரிமார்களே நேற்று பதினாறும்நாள் வரைக்கும் யுத்தம் முடிந்து இன்றைக்கு பதினேழாம்நாள் யுத்தமானபடியால் நமது சேனைகளையெல்லாம் சக்கர வியூகமாக அணிவகுத்து தயார் செய்துவிட்டு இன்னம் வந்தவர் வாராதவர்களை தயார் செய்து எனது அண்ணாவாகிய கர்ணமகாராசனை அழைத்துவாரும் மந்திரி.

## கர்னன் கவி

சந்திர ஆரம்பளபளென்ன சோதிமாமகுடமின்ன
சுடர்மழுவாள்வில்லு பிண்டிசக்கரம்
தோமறம்கேடயம் பிடித்து
சந்தணகந்தசுகந்தமும் வாடைகமகமவெனவீச
தங்கபீதாம்பரப்பட்டுகள்மின்ன தாவடமார்பினிலசைய
அந்தரத்தனவோர் வந்துநெருங்கிட
அமர்களம்தனிலே ரணசூரன்
அர்ச்சுனனுயிரை பக்ஷணம்செய்ய
ஆயுதபாணமும் பிடித்து
செந்திருவழகர்சேனாதிபதிபூண்டு திரிலோகமதிரவே தாக்கி
செகதலம்புகழும் கர்ணபிஷேகான்
துரியன்முன் வருகின்றேனே.

## கர்னன் தரு

தீரனும்கர்ணபிஷேகரன்    வந்தான் நல்ல
சிலைதனிலழகிய    தனபதிசேனாதி
பட்டம்கட்டியே    ஒளிதந்தான்
மாறன் இவனைக்கண்டு    மனமது வெட்கியே
நிலைபிறண்டோடிட

சு    மாதர்மாதானுகூலமதாய்    அனுசீலமதாய்    தீரனு

அந்தலுவரும்    எனக்கீடோ அந்த
அர்ச்சுனனுயிரை    பக்ஷணம்செய்வேன்
இந்தபாரதத்தை    முடிப்பேன்
பந்தயம்செய் துரியன்    சிந்தைமகிழ்ந்திடவே

சு    பாதாபதாங்குச    பாசமா
யேதென்றைவரையிப்    போதழிக்குரேன்    தீரனு

வில்லம்புவாள்கெதையெடுத்து    சத்துருபயல்களை
வெல்லுவேனென்று    பேர்படைத்து
வல்லவன்கடோர்கசனை    வதைத்தவீரப்பிரதாபன்

சு    பாமலரும்பல    வாடைகள் வீச
மங்கையர்கண்டுமே    மனமது கூச
தேர்பரியானைகள்    சேனைகளும்பல
சித்திரம்போலழகுத்தமன்    வருகுறான்    தீரனு

பாண்டவர்களும் யெனக்கிடோ புவியிலுள்ள
பார்த்தவர்களும் பயந்தோட
தூண்டாமணி நாக அஸ்திரம் சூறப்பாணம்மிருக்க

௫ தொல்லுலகனைத்தும் சூரியனுக்காச்சுது
சூழ்புவியில்ஐவர் பேரதுபோச்சுது
துந்துமிபேரிகை சந்ததமும்பல
தொந்தோம்தொந்தோம் தொந்தோமொலித்திட தீர

## சூரியன் விருத்தம்

சேர்வையும் கண்டேன் கண்டேன்
செகமுடி ஒளியும் கண்டேன்
போர்கோலம் நீகொண்டதாலே
புவியாளநான்கைக் கொண்டேன்
சூரர்கள்உனக்கொப்பாக சொல்லுவாருலகிலில்லை
பாரதம்முடிக்கவந்த பார்த்தீபாசருணம்அண்ணா.

## சூரியன் வசனம்

அண்ணா உன் சேர்வை கண்டபோதே பாரதம் முடிந்து இந்த புவியை நான் ஆள்வது நிச்சயம் அண்ணா.

## கர்னன் விருத்தம்

தீரமும்புகழுமன்பும் செங்கோலும்அரசும்வாழி
பேர்பெறசதுரங்கசேனை புத்திரர்களத்திரரோடும்
சீருள்ள அரவதுவசம் செகமுள்ளவரையிற்றுனே
காருள்ளவரையில்கீர்த்தி காளையேவாழ்ந்திடாயே.

## கர்னன் வசனம்

ஆகா தம்பி துரியோதனா உனது செங்கோலும் அரசும் அரவத் துவஜமும் செகமுள்ள வரையில் சுகம்பெற வாழ்வாய் தம்பி துரியோதனா.

## துரியோதனன் தரு

ஆசாநமக்குநிகர் உண்டோஉண்டோ உலகில்
ஆர்தான்நம்மைசெயிப்பார் உண்டோ இந்தப்புவியில்

௬ அரனும்தேவரும் அயன்மால்மூவரும்
சரியோநமக்குதகுமோ தகாது அண்ணா ஆகா

### கர்னன் தரு

தம்பியிந்தநாள்மட்டும் தாக்ஷண்ணியமாயிருந்தேன்
தயவினியான்பாரேன் ஐவரைக்கொல்லதயவினி
௫ சத்தியயாகவே வெற்றியும்தருவேன்
பத்தியின்னுளில் வெற்றிபுரிவாமன்னு தம்பி

### சூரியன் தரு

நீர்கொண்டகோலம்போல ஆர்கொண்டார்அறிகிலேன்
சீர்கொண்டபதினேழில் செயிப்பேனுன்பயம்விண்டேன்
௬ செகதலமுழுதும் யெனக்கேஆச்சுது
சிந்தைகலங்கின தெல்லாம்போச்சுது நீர்

### கர்னன் தரு

பஞ்சபசங்களுக்கு அஞ்சவேண்டாமிப்போது
கொஞ்சநாழிகைக்குள்ளே கொத்துடன்கொல்லுறன்பார்
௭ கொண்டல் மேனியன் கோவிந்தன்கிருஷ்டனை
செண்டுபோலாட்டியே சிதைக்குறேன்பாரிதோ பஞ்ச

### சூரியன் தரு

வெத்தியும்கண்டேன்கண்டேன் வீரவில்லதுவும்கண்டேன்
ஒத்திடும்நாகபாணம் உறுதியுள்ளதுவும்கண்டேன்
பத்தியாகபாண்டவாளை பதாதிசெய்திடுவதற்கு
நித்தனேஉமக்குவேண நிலமையைகேளுமண்ணு.

### சூரியன் வசனம்

கேளும் அண்ணு உனது வில்லினுடைய பெருமையும் நாகாபாணத்தின் உறுதியும் கண்டேன் பாண்டவர்களை இன்று பதாதி செய்வது நிக்ஷயம் தங்களுக்கு வேண்டுமானதை கேளும் அண்ணு.

### கர்னன் கவி

எனக்கொருகுறைவுமில்லை இன்னமோர்சேதிகேளும்
தினகறன்போலகிருஷ்டன் தேர்விசையன்சாரதியுமானுர்
மனுநெறிசல்லியபூபன் மன்னன்சாரதியுமானல்
கனிவுடன்ஐவர்தன்னை கண்டித்துவருவேன்மன்னு.

### கர்னன் வசனம்

கேளும் தம்பி துரியோதனு எனக்கானுல் சர்வவல்லமையினுல் யோகபாக்கியத்தினுல் ஒரு குறைவுமில்லே ஆனுல் ஒரு சமாச்சாரம் இருக்கிறது கிஷ்டமூர்த்தியானவர் அர்ச்சுனனுக்கு தேர்சாரதி செய்கின்றபடியால் அதற்கு சமதையாக மந்திரபூபதி சல்லியமகாராசன் இன்றைக்கு எனக்கு சாரதி செய்யும் பக்ஷத்தில் இன்று ஐவர்களே வென்று உனக்கு முடிசூட்டி வைக்கின்றேன் இது நிக்ஷயம் துரியோதனு.

### பொது வசனம்

அப்போது சல்லியன் வருவது.

### சல்லியன் கவி

அகிலமெல்லாம்தத்தளிக்க அதிரத்தாக்கி
  அண்டர்வந்துதெண்டனிட தனுவாளேந்தி
தினகரன்போலொளிவிளங்க கந்தம்வீச
  சிங்கம்கெர்ச்சித்தாப்போல் அதும்மெழும்பி
நகைவதனமுகமிலங்க மகுடமின்ன
  நானிலத்திலுள்ளமன்னர் முடிகள்தாழ
செகமதிலேசல்லியனெனும் ரூசபூபன்
  திடங்கொண்டான்ரணகளம்வந் திடங்கொண்டானே.

### சல்லியன் தரு

சத்திய சவுக்கியமுள்ளதீரன் ரணகளத்தில்
சாஸ்திரவேதத்திலவுதாரன்
முத்திதரும்பூசனை சித்தம்வைத்தசிங்காரன்
மூவுலகிலேகீர்த்தி சத்துருவதைசங்காரன்
தனுவதைவளேப்பேன் அண்டமுகடதைஉடைப்பேன்

சு தினகரனும்பல தேவர்நடுங்கிட
சித்துகள்யெத்துகள் வித்தைகள்படிப்பேன் சத்திய

அண்டர்களெல்லாம் யெனக்கீடோ திரிமூர்த்தியார்
அசுரர்கண்டுமே பயந்தோட
சுண்டக்காய்மலேகளே செண்டாயெடுத்தாட்டுவேன்
பண்டுமுனிவர்களே பத்தியெடுத்தெறிவேன்
பாரதமுடிப்பேன்கீர்த்தி விருதுகள்படிப்பேன்

சு சூரரும்வீரரும் மாரிபோல் பொடிபட
காரிடிபோலவே பேரிகைமுழங்கிய சத்திய

எதிர்த்தசத்திராதிகளை வெல்வேன் அவரைக்கொன்று
அப்போதல்லவோ என்பேர்சொல்வேன்
கொதித்தஅக்கினிமுன்னே மதத்தயானைபோல்சீறி
துதித்துதுரியன்நம்மை அழைத்தவிதமும்கூறி
குவலயம்மிதிப்பேன் துரியன்குறைகளை தீர்ப்பேன்

சு அரவணை கிருஷ்ணனை அர்ச்சுனனிருவரை
திரிபுரதகனமாய் செய்குவேன்பாரிதோ சத்திய

நல்லப்பாகைநகரில் வாசன் வன்னியகுல
நாதன்சின்னதுயின்ற கிஷ்டன்
முல்லைசுகந்தகந்தம் நல்லமலர்கள்சூடி
சல்லியனெனும்பூபன் வல்லவன்யீதோவாரான்
ராசரும்புகழவீரர் ராணுவம்தாழ

சு தேர்பரியானைகள் சேனைகளும்பல
ராணுவப்படையுடன் வருகுறேன்பாரிதோ சத்திய

## துரியன் தரு

சரணமுந்தன் திருவடிக்கு சல்லியபூபனே
கருணைவைத்துஎன்னையாளும் காருண்ணியநாபனே
சத்தியதீராவெற்றிதாராய் உத்தமனேஒருகோடிவந்தனம் சரு

சந்தணம்புனுகுபன்னீர் உன்மேலேவீசினேன்
சாந்துசவ்வாதுஅத்தர் மேலேபூசினேன்
சம்பிரமதாய்யின்பமாக நம்பும்யேழையைநாதனேயாதரி சரு

கந்தமலர்ஆறம்தோடா உன்கழுத்தில்சாற்றினேன்
கனகபீதாம்பரப்பட்டுஉன் மேலேபோற்றினேன்
கடவுள்போலவே வடிவுமேலதாய்
யிடைவிடாமலா யெந்தனைகாத்தருள் சரு

முத்துநவரத்திணம் தோடாமுன்கைபாச்சியும்
மோகனமாலையுள்ளதுவும் யேகபோகமாய்
யிதுமுக்கியமா வெகுபக்குவமா
திக்குவேறில்லையே தீரனேகாத்தருள் சரு

### துரியன் சூரணிகை

அகிலபுவனம்விளங்கா கோலாகலா
குவலையத்தளங்கா குருக்ஷேத்திரசிங்காரா
ரணமுகத்தூதாகாரண வீரபாண்டியா
சண்டப்பிரசண்ட உத்தண்டகெம்பீரவீரசூரா
சூலாமணிசோமசூரிய ஆக்கினேயதுங்கமங்களகாரணு
வீரசல்லியபூபா சரணம்சரணம்மாமாவே.

### சல்லியன் தரு

சந்திர குலாதிபாவாரும் யெந்தன்
சமர்த்திலுல்ஐவரும்படும்பாடதைகேளும்
பொருத்தனுன் இந்தமட்டும்தானே ஐவரை
பொடிப்படதவடாக அடிக்குறேன்நானே
அஞ்சிப்பயப்படாதேநீயே புலி
யாளலாம்யென்னுலேவிடைதருவாயே
கொஞ்சநாழிகைக்குள்ளே தானே ஐவரை
கொத்துடன் கொல்லுறேன் பார்யானே
கிருஷ்ணன்பலவா னென்றெண்ணுதே அந்த
கிரீடிசமத்துநம்மை யொன்றும்பண்ணுதே
தந்தேன்உனக்கு சத்தியம்நானே யிப்போ
தவறுதுகுறையாது உன்பயந்தானே சந்திரக்

### சல்லியன் விருத்தம்

தந்தனுன்உனக்குசத்தியம் சந்திரசூரியரும்சாக்ஷி
பந்தயம்வந்துகூடும் பார்த்தனையாண்டுகொள்வாய்
நிந்தைதான்உனக்குவந்த நிஷ்டூரம்என்னுயிப்போ
விந்தைகளென்னமோதான் விளம்புவீர்வேந்தர்கோவே.

### சல்லியன் வசனம்

ஆகா என் ஆசைமருமகனுகிய திரியோதனு சந்திரர் சூரியர் சாக்ஷியாக நீ நினைத்தகாரியத்தை நானே முடிப்பேனென்று அஸ்தம் போட்டு தந்தேன் என்னிடம் கபடமில்லாமல் சொல்லும் துரியோதனு.

### துரியன் விருத்தம்

ஆனந்தம்கொண்டேன் பூமிஆளவேமுடிகள்பூண்டேன்
காணியாளர்களைவென்றேன் கலக்கங்கள்எல்லாம்தீர்ந்தேன்

தேனுறல்மாலைபூண்ட செகதீசநாதாயிப்போ
நான்சொல்லும்மொழிகள்தன்னை நன்றாககேளுமன்னா.

சூரியன் வசனம்

ஆஹா மாமா சல்லியமகாராஜனே முடியை நிலை நிறுத்துவே னென்று தாங்கள் அஸ்த்தம்போட்டு தந்தபோதே ஆனந்த சந்தோஷம் கொண்டேன் நான் சொல்லப்பட்ட வார்த்தையை நன்றாகக் கேளும் மாமாவே.

சூரியன் தரு

சந்தோஷமாகினேனே யெந்தனுக்கொருவரீடோ
சாத்தும்மொழியைக் கேளும் கீர்த்திப்ரதாபனே
அந்தணாலேயில்பிர்மன் அரன்சாரதியுமானார்
ஆதிசேஷனும் அண்ட புவனமூன்றும் சுமந்தார்
மாலும் எருதாசிவன் யேரும்வாகனமானார்
மறுபடிராமருக்கு அனுமந்தன் தூதுபோனார்
இப்படிஎடுத்துகாட்ட இன்னமுமனேகமுண்டு
நாப்படிகர்னனுக்கு ரதசாரதி நீயேயாகும்

சூரியன் விருத்தம்

இப்படிஎடுத்துக்காட்ட இன்னமும்அனேகமுண்டு
நாப்படிகர்னனுக்கு ரதசாரதிநீயேயாகும்
கொப்பனஉலகமெல்லாம் கொள்வதுநிசமேயாகும்
தப்பிலாசத்தியம்செய்தீர் தடையில்லாவருவீர்மன்னா.

சூரியன் வசனம்

கேளுமப்பா சல்லியமகாராசனே தாங்கள் என் அரசை நிலை நிறுத்துவேனென்று சத்தியம் செய்தீரல்லவா அது உண்மையானால் இன்று பதினேழாம்நாள் யுத்தமாகையால் என் செங்கோல் நிலைநிற்பது உண்மையானால் கர்னராசனுக்கு தாங்கள் ரதசாரதியாயிருந்து ரதம் நடத்தினால் இந்த உலகை யான் ஆளுவேன் மாமா சல்லியராசனே.

சல்லியன் விருத்தம்

கேட்டவுடன்யிருவிழியும் பொரிபறக்க
கெடிபெறவேஅண்டமெல்லாம் தத்தளிக்க

நாட்டைவிட்டுமெய்மறந்து கைகள்சோர்ந்து
நமனுலகபுவனமெல்லாம் நடுநடுங்க
வாட்டமதாய்பல்கடித்து வாய்திறந்து
வசையுரையாஉன்னுவை வாளால்வெட்டி
கூட்டமதாய்உன்னையும் கர்னனையுமிப்போ
கொல்லுவேன்பார்என்றுமனம் கூறுவானே.

சல்லியன் வசனம்

அடா துரியா என்ன வார்த்தையுரைத்தாய்? அடா வெறியா? உன்னையும் அந்த கர்னனையும் என் கைவாளால் கொல்லுகிறேன் பாரடா துரியா?

சல்லியன் தரு

ஆமடா துரியாஉனக்கு இத்தனைகெர்வம்
அடக்கிவைத்திடாமலே எடுத்துரைத்தாய்
சொன்னசொல் உன் நாவை யறுப்பேன்யிப்போது
தலைதுணித்துதொல்லுல கெல்லாம் தர்மருக்களிப்பேன்
கர்னனவன்பிலவானு உலகில்கீர்த்தி
ட்டடாகடையையிங்கே கிட்டிநில்லாதே
சகுனிகர்னனுலேஉன் குலத்திற்கு
தாகூஷியென்றறியாமலே பேசி நடந்தாய்
துஷ்டபுத்தியாலல்லவோ உந்தன் தகப்பன்
துரைத்தனமும் அரசும் அழித்துவிட்டானே
அழியாதஅரசாச்சே அய்யய்யோபாவி
அழித்தாயேபுவனத்தோர் நகைத்திடவே
என்னபுத்திநினைந்தாயடா நீ என்னிடத்தில்
இப்படியுரைக்கலாமோ தப்பிலிப்போடா ஆமடா

சல்லியன் விருத்தம்

நீசெய்த பெரும்பிழையை பொறுத்தேனின்னம்
நீனிலமும் மாமுனிலமும் வேண்டுமானல்
போர்செய்து ஐவரையும் கொன்றுவிட்டு
பொன்முடியும் அரசுபதியெல்லாம் தாரேன்
சீர்செய்யும் சேனதிபதி எனக்குதாரும்
க்ஷணப்பொழுதில் பாரதப்போர் முடித்துயானும்

பேருலகம் புவியாள வைத்துவிட்டு
பின்புஎந்தன் நகரத்தில் புகுவேனே.

சல்லியன் வசனம்

அடாவாடா துரியோதனு? நீசெய்த பெரும்பிழைகள் எல்லாம் யான் பொறுத்துக்கொண்டேன் இப்பவும் அந்த கர்னனுக்கு கொடுத்த சேனதிபதிபட்டம் எனக்கு தந்தாயானல் இன்றையப் பொழுதில் பாரதத்தை முடித்து அஸ்தினபுரியை உனக்கு முடி சூட்டி வைக்கின்றேன் எனக்கு சேனதிபதிபட்டம் தாரும் துரி யோதனு?

துரியன் தரு

கர்னன்சாரதியாக வாருமே மாமா — என்
கண்கலக்கமெல்லாம் தீருமே
காமராசனே செகதீசனே — கர்ன

சல்லியன் தரு

கர்னனும் உன்குலதெய்வமோ — துஷ்டா
கடையனவனலென்ன செய்யுமோ
காட்டுராய் ருசம்பூட்டுறுய் — கர்ன

துரியன் தரு

வீருப்பதினலொன்றும் வெல்லாது — நமது
வீம்புஒருக்காலும் செல்லாது
வேந்தனே உக்கிரகாந்தனே — வீருப்

சல்லியன் தரு

சேதிதெரியாமல் செருக்குறாய் — உந்தன்
செல்வத்தாலேகொர்வம் பலுக்குறுய்
தீராதேபெதிர் பாராதே — சேதி

துரியன் தரு

ஆபத்துக்குதவுவீ ரையனே — என்னை
ஆதரித்திடவேணும் மெய்யனே
அடுக்காதேயிதை கெடுக்காதே — ஆபத்

சல்லியன் தரு

கெட்டசாதியானுக்கு யெந்தனை — ரதம்
கிட்டிஓட்டிடச்சொன்னுய் வேந்தனே
போடாவீணனே பழிபூணனே — கெட்ட

### தூரியன் தரு

ஊனமென்றவர் தன்னை யெண்ணாதே மாமா
யுத்தகளத்தில்கீர்த்தி குண்ணாதே
கூட்டுவீர்ரதம் ஓட்டுவீர் ஊன

### சல்லியன் தரு

சாதியீனகுல மாச்சுதே கர்னன்
க்ஷத்திரியனென்றபேர் போச்சுதே
தாழ்வானே யுரைதந்தாழ்வானே சாதி

### சல்லியன் விருத்தம்

சாதிதான்குலமுமேது தந்தைதாய்பிறப்புமேது
மேதினிலவனைப்போ வேந்தர்போலாக்கிவைத்து
நாதனுன்நம்மையின்று ரதத்தொழில்செய்யச்சொன்னாய்
போதனைகொள்ளவந்தாய் புத்திகெட்டவனேபோடா.

### சல்லியன் வசனம்

அடா வாடா தூரியோதனா? அந்த கர்னனுக்கு சாதியென்னா? குலமென்னா? அவனுக்கு அந்த தேசத்தை பட்டம்கட்டி ராசர்கள் மெச்சும்படி சரியாகிவிட்டாய் அவனுக்கு ரதம் ஓட்டச்சொல்லி என்னை அழைக்கின்றாய் புத்திக்கெட்டவனே அப்புறம் நடவும்.

### தூரியன் தரு

சாதிபலவகைகள் தானுரைக்கக்கேளும் மாமா
சகலரிஷிகளேபிர்மன் தான்தோன்றியதாகும் மாமா
சுத்தபிர்மமுகத்தில் தோன்றினார்பிராமணாள் மாமா
தோளிலுர்ப்பனமானர் ராசரின்னமுங்கேள் மாமா
இடையிலுர்ப்பனமானர் வைசியரின்னமுங்கேள் மாமா
பாதத்தில்சூத்திரர் யிவர்நாலுசாதிதான் மாமா

### தூரியன் அகவல்

இவர்காணும்நாலுசாதி என்பவர்கள்
உயர்குலம்ஆணும் தாழ்குலம்பெண்ணும்
அவர்களும்கூடி அதில்பிறந்தோருக்கு
அனுலோமசாதியென் றனமத்தனருலகோர்

தாழ்குலம்ஆணும் உயர்குலம்பெண்ணும்
அவர்களும்கூடி அதில்பிறந்தோருக்கு
பிரிதிலோமசாதியென்று பிரித்தனருலகோர்
அனுலோமம்ஆணும் பிரிதிலோமம்பெண்ணும்
இவர்களும்கூடியிதில் பிறந்தோருக்கு
சங்கரசாதியென்று சாற்றினருலகோர்
எட்டுவிவாகத்தி லிழிவானசாதி
சட்டமாயுரைப்பேன் தகுதியாய்கேளும்
விதவியும்வேறொரு வீரரைச்சேர்ந்துபிறந்தால்
கோளகசாதியென்று கூறினர்உலகோர்
மங்கிலியஸ்திரீகள் மற்றொருவனைசேர்ந்துபிறந்தால்
குண்டகசாதியென்று கூறினருலகோர்
கன்னிகழியாமுன் கணவனைச்சேர்ந்துபிறந்தால்
சானீனசாதியென்று காட்டினர்உலகோர்
இன்னமுஞ்சாதி இப்படியிருக்க
அன்னிலமாவர்க்கும் ஆதிபிர்ம்மந்தான்
தந்தைதாயிரண்டுஎன்று சாற்றினர்உலகோர்
கர்னனையீனமாக காட்டஒண்ணாது
புண்ணியாசாரத்தியம் புகலுவீர்மன்னா

சல்லியன் தரு

இன்னம்வம்புகள் பேசிகுலுக்குறாய்
எட்டாதகொம்புக்கு ஏணியேன்கட்டுறாய்
கர்னனுக்குரதம்ஓட்ட அழைக்குறாய் என்
காலிலேதளை பூட்டியிழுக்கிறாய்
கற்றவனேநெறி யுற்றவனே நேசம்
கெட்டவனேநாடு விட்டவனே அடா
போடாபடுபாவிஎன்னெதிர் நில்லாதடா துரோகி இன்

சூரியன் தரு

கட்டுகுலைய விட்டுபேசாதே மாமா
காகுத்தன்போல்மனம் வைத்திடுவாய்நேமா
சட்டம்சளுக்கெல்லாம் நாளையமட்டும்தானே
சாதிகுலபேதம் நாதவிந்தந்தானே

தள்ளாதேமனம்    கொள்ளாதேகல்வி
நில்லாதேயென்னுடன்    சொல்லாதே
வாரும்வாரும்மாமனே சாரத்தியம்தாரும்தாரும்மாமனே

### சல்லியன் தரு

சங்கடம்பேசிதலை    தள்ளிபோகுறாய்
சாரதிதொழில்செய்ய    அழைக்குறாய்
பக்கத்திலேபகையாளி    நகைக்குறார்
பார்த்திபனென்றதோர்    பேரைக்கெடுக்குறாய்
படிக்காதேசொல்லி    துடிக்காதே
சாதிக்கடுக்காதே    தொழிலெடுக்காதே
போடாபடுபாவி உனக்கென்ன    போங்காலமோபாவி சங்

### தூரியன் தரு

சாலஞ்செய்துமென்ன    காலம்நீதள்ளாதே
தருணத்திலேயுத    வாமல்நீபோகாதே
மாலும்கிருஷ்ணதேவர்    போலநீயாகவே
மன்னன்கர்ணரதம்    ஓட்டநீயேகவே
மயங்காதேசொல்லி    தியங்காதே
நயங்கொள்ளலாம் நாமும்    வயரங்கள்பேசாதே
வாரும்வாரும்    மாமனேசாரத்தியம்
தாரும்தாரும்    நேமனே சால

### சல்லியன் கந்தார்த்தம்

நீதியென்னமுறைமை    யென்ன உந்தனுக்கு
நீச்சனென்றுமெல்லாம்    சரிதான் தூரியாபோடா
சாதியிலேசின்ன    குலகர்னனுக்கு
தாய்தந்தைபேர்சொல்ல    ஒருவரில்லை
சூதாகஇவனைஎடுத்துஉன்    தந்தைவளர்த்தான்முன்பு
துரைத்தனமும் நீசெய்துவைத்தால்    துரையாவானோ
ஏதடா அவனுக்குரதம்    ஓட்டச்சொல்லி

### தரு

நிஷ்டூறம்செய்ய    வேண்டாமே விடுவிடுமுந்தன்
பக்ஷம்உறவும்    வேண்டாமே
கஸ்திபடுத்திஎன்னை    கசக்கிப்பிழியவேண்டாம்
இஷ்டபரிபாலனம் எல்லாம்    இன்றோடேபோச்சே நிஷ்

### தூரியன் கந்தார்த்தம்

ஆதிஅரன்மால்பிரமன்    சுப்பிரமணியர்
அகத்தியமாமுனி    வசிஷ்டர் பராசராசர்
வேதகுலதுரோணருமே    அஸ்வத்தாமா

விண்ணவர்கள் முனிவர்களும் வேணபேர்கள்
சாதியிலேகொஞ்சமல்ல அவரையிப்போ
தள்ளினரோ சாஸ்திரத்தில் பலவானனர்
நீதியுள்ளகர்னனை யிகழவேண்டாம்

தரு

நிறுத்திதயவுபாருமே ரணகளத்தில்
கருத்துவைத்து என்னைக்காருமே
பெருத்தசண்டையில்பார்த்தன் பூமுடியைத்துணித்து
தரிப்பீரெனக்குபட்டம் சாரத்தியம் செய்யவாரும் நிறு

சல்லியன் விருத்தம்

முன்புநீஎனக்குசெய்த மோசமேபோதும்போதும்
பின்புமேயிந்தகுற்றம் பெருஞ்சுமைதலையிற்கொண்டேன்
நம்பிநான்செய்தகுற்றம் நமக்கதுயிடறேயாச்சு
இன்பமாய்ரதமேஓட்ட யிசைந்துநாம்நடப்போம்வாரீர்.

சல்லியன் வசனம்

அடாவாடா துரியோதன நீ எனக்கு முன்பு செய்த உபசார மெல்லாம் அறியாமல் போனேன் பின்பு நான் சந்தோஷம்கொண்டு செயம் தருவேனென்று அஸ்தம்போட்டு தந்தேன் அது எனக்குத் தலை சுமை ஆகிவிட்டது ஆனல் இனி விடப்போகிறது இல்லை சரி ரதம் ஓட்ட சம்மதமாகினேன் நடக்கலாம் வாரும் துரியோதனா.

துரியன் தரு

ஆனந்தசந்தோஷம் கொண்டனே புவி
அரசுசெங்கோலையினி பூண்டனே

மெச்சினேன்உன் கீர்த்திவாருமே மாமா
மன வியாகூலங்களெல்லாம் தீருமே

இப்படித் துணிந்தாலல்லோ சாதுரியம்
எவர்உன்னைப்போல் வருவார்வீரியம்

வாக்குநான் வரம்தந்தபோ தெல்லாம்
வயரங்கெலித்தினிமீதெல்லாம்

பார்த்தனைக்கொல்வது நிச்சயம் பஞ்ச
பாண்டவரைக்கொல்வது சத்தியம்

துரியன் கவி

புண்ணியப்எந்தன்கையில் புகழ்பெறவந்தாய்போல
மன்னவன்சல்லியபூபன் மாமாவும்வந்தாரிங்கே

சொன்னசொல்படியேசென்று துரைமகள்விசையன்தன்னை
கொன்றுமேயெனக்குபட்டம் குவலயம்தாரும்அண்ணு

வசனம்

கேளும் அண்ணு கர்னமகாராசனே நம்முடைய புண்ணியமானது கைவல்லியம்போல் கூடி வந்தது தேவரீர் சொன்ன வாக்குப்படி அர்ச்சுனனைக்கொன்று வெற்றி பெற்று எனக்கு முடிதரிக்க வேணும் அண்ணுவே.

கர்னன் தரு

ஆனந்தசந்தோஷம் கொண்டானும் புவிமீது
ஆகாநமக்கு நிகர் யெவர்தானுண்டு
ஏகபோகங்களெல்லாம் எனக்கேயுண்டு
என்மாமனே மந்திர பூபதியே
மன்னர்நமக்கு யீடா கூறுவீரே என்
உன்னிதமான ரதம் யேறுவீரே
இருவரும் ஒருமுகமாய் நின்றதேயாமாகில்
எவராகினும் அவரை விடப்போமோ
உறவதையுமிப்போ ஒழிப்போமே
கிருஷ்ணன்அர்ச்சுனனை விடப்போமோ
அரவத்திற்கிரையாகக் கொடுக்குறேன்பார்
கெருவத்தையுமிப்போ அடக்குறேன்பார்

கர்னன் கவி

பகைஞரைவதைக்கும்தீரா பராக்கிரமசாலிசேளாய்
தகைமைசேர்ரதத்தையிப்போ தானலங்கிர்தம்செய்யும்
செகமதுபுகழுமெந்தன் தேவிபொன்னுருவிமாதை
மகிமையாய்க்கண்டியானும் வருகுவேன்வருகுவேனே.

கர்னன் வசனம்

ஆகா மாமா சல்லியராசனே ரதத்தை அலங்கிர்தம் செய்யும் எனது தேவியாகிய பொன்னுருவி மாதைக்கண்டு வருகின்றேன்.

கர்னன் விருத்தம்

சங்கீதசரசசாக்ஷி தாதிமீரிங்குவாடி
பொங்கமாயமாடிசென்று பொன்னுருவிதேவியாளை
அங்கவர்அரைநொடிக்குள் அரசனும்அழைத்தானென்று
இங்குள்ளசபைமுன்பாக இக்ஷணம்கொண்டுவாரீர்.

கர்னன் வசனம்

ஆகா தாதிமார்களே அரண்மனை சென்று எனது தேவியாளாகிய பொன்னுருவிமாதை நாம் அழைத்ததாகச் சீக்கிரம் என் சமுகம் கொண்டுவாரும் தாதிகளே.

### பொன்னுருவி கவி

கன்னியர்க்கரசிமேலாங் காமசுந்தரியாளென்ன
மின்னிடைவடிவந்துன்ன வெங்கதிர்முகம்விளங்க
சொர்ணமாம்பணிதிமின்ன துகிலுடைசேலைதுன்ன
மன்னவன்தேவியான மாதுபொன்னுருவிவாராள்.

### பொன்னுருவி தரு.

| | |
|---|---|
| சொர்ணமுருகுமேனி | வர்ணசிலையழகி |
| பொன்னுருவிமாதுவந்தாள் | ஒய்யாரமாக-பொன்னு |
| கன்னலாசன்மொழி | என்னமதனரதி |
| அன்னசுகிர்தவடி | வென்னநடையுடையாள் |
| சு மாங்குயிலோதொனி | பூங்கிளியோவென |
| கோங்குமலர்ப்பதம் | தேங்குகமுகுவென சொர் |
| சிலைநுதலில் ரத்தின | திலர்தம் தளதளென்ன |
| திரண்டகும்பஸ்தனங்கள் | இரண்டும்பம்பரமென்ன |
| சு தேர்மதனிக்கலை | ராகிதமோவென |
| சீனிசக்கரையா | வெனவேயிதழ் சொர் |
| ரத்தினவச்சிரக்கல்சிட்டி | புஷ்பாக மிழைத்தமேட்டி |
| முத்துாவிக்கைமாட்டி | ஒத்துசிந்தாகும்பீட்டி |
| சு வேல்விழியோகயல் | சேல்விழியோவென |
| மாதிருவாள்கூடி | வாழ்விடமோவென சொர் |
| செந்திருபாகைநகர் | ஸ்ரீநாராயணரை |
| சேவித்தனுதினமும் | வாழும்பதியுடையாள் |
| சு சீதளசந்திரன் | போல்முகசுந்திர |
| கோதிளமாமயில் | வாடைகள்வீச சொர் |

### பொன்னுருவி சீசாத்தியம்

சந்திரரூபியேதளிர் கின்றவதனியே
தாதியேயென்மனம் தயங்குதம்மா
சிந்தையும்கலங்குது தீவினைக்கென்செய்வேன்
சீரும்குலைந்திட காலமிதுவோ
புத்தியும்சோருது பூமலர்வாடுது
பொன்னுபரணமெலாம் கருகுதம்மா
நிந்தையொன்றுகுது நித்திரைதன்னிலே
நேரத்தில்சொர்ப்பனம் கண்டனம்மா.

### முடுக்கு

என்னடிசகிமாரேயிறைவருக்கென்னமோ யிடறுமறியேன்
பொன்முடியரசுமில்லாமலே புவிமீதுவாழ்வதுண்டோ

சொன்ன சொல்மாறாது சொர்ப்பனம் தவறாது தோகைமாரே
[யினியேது செய்வேன்
கன்னியர்க்கரசான கர்ணாபிஷேகரைக் காண்பேனோயென்செய்வேன்
[சகிமாரே.

பொன்னுருவி தரு

தாதிமாரேயென்னாசெய்வேன் தாக்ஷியொன்றும்யானறியேன்
மன்னருக்குகுறையென்னமோ மாயமொன்றும்யானறியேன்
கணவருக்குக்குறையென்னமோ காரணமோயானறியேன்
அசந்துபஞ்சணைஉஞ்சலிலே யானும்நித்திரைசெய்யயிலே
விதவமாதராகவந்து என் மேனியெல்லாம்துடைக்கக்கண்டேன்
நானும்ஒருதலைசீவி நங்கையே பூ முடிக்கக்கண்டேன்
எண்ணைத்தலையோடுமன்னர் என்னெதிரேவருகக்கண்டேன்
மங்கிலியம்தானறுந்து மடியில்விழக்கண்டேனம்மா
மாலைசுகந்தகந்தான் வாரிவீணில்அரையக்கண்டேன்
காலாழியும்பீலாழியும் கைமோதிரம் நழுகக்கண்டேன்
அய்யோயென்தன்தலைவிதியோ ஆக்கினையோயென்னாசெய்வேன்
வில்வராதாபுரிகிருஷ்ணா மெல்லியர்க்குத்துணைவருவாய்

பொன்னுருவி கொச்சகம்

அய்யோதிருவிளமே ஆருக்கிடர்செய்தனைய்யோ
பொய்வாழ்வாயிப்புவியில் பெண்ணாய்ப்பிறக்கவைத்து
கையாலணைந்தளந்தன் கணவருக்குநீர்துணையாய்
செய்யவேணும்ஸ்ரீஅரிஓம் திருமாலேஅபயமையா

பொன்னுருவி கவி

அம்மணியமுதேமாதே யரசிளங்கொடியேவாழ்வே
செம்புவியரசர்க்கெல்லாம் திருமுகவதிசிங்காரன்
எம்பெருமானும்கர்னன் யிக்ஷணமழைத்தசேதி
தென்கொண்டவர் முன்பாக சீக்கிரம்செல்குவோமே.

வசனம்

ஆகா வாரும் என் பாங்கிமார்களே! இவ்வித சொர்ப்பனம் பழுதாகாது, என் நாதருக்கு என்னமோ அறியேன் நம்மை சீக்கிரம் சமுகம்வரச் சொன்னாராம் அவரைக்கண்டு சேவிப்போம் வாரும் தாதிமார்களா!

பொன்னுருவி தரு

நாதர்பாதம் தெரிசனம் கண்டேனே
நானே அமுர்த பாணமும் கொண்டேனே
சேதியுரையும்மார்பா சிவந்தமலர்பொற்பாதா
மேதினிஆண்டவைபோகா மெல்லியர்களனுபோக நாதர்

பாதடுதரிசனம்யான்காணமன்ன பலனென்னபெற்றனேசீர்வேண
காதலளிக்கும்நாதா கன்னியர்க்குகந்தபூபா
பூதலத்தாண்டவைபோகா புண்ணியவரப்பிரதாபா நாதர்

பொன்னுருவி கொச்சகம்

சித்திரவில்லழகா சிங்காதனத்தின்பொற்புலியே
உத்தமரேயான்சருணம் உண்மையென்னதானுரைப்பீர்

கர்னன் கொச்சகம்

ரத்தினபசுங்கிளியே நாகரீகமாமயிலே
உத்திரவுசொல்லுகிறேன் உண்மையுடன் கேளும்பெண்ணே

பொன்னுருவி வசனம்

ஆகா என் பிராணவல்லபரே அரண்மனையில் இருந்த என்னை அழைப்பித்தவிதம் சொல்லும் நாதா.

கர்னன் வசனம்

ஆகா பெண்ணே! உன்னை அழைத்தவிதம் சொல்லுகின்றேன் என் அருகில் வாரும் பெண்ணே.

கர்னன் தரு

வாரும்பெண்ணே ரஞ்சிதமே மதனருசிகரமே
வந்திருப்பாய்என்னருகில் என்பெண்ணே கண்ணே வந்தி

பொன்னுருவி தரு

பெண்களுக்குகந்தநாதா பூவையர்க்கரசேமன்ன
பிரியமென்னசொல்லும்மன்ன எனதண்ணல்வள்ளல் பிரி

கர்னன் தரு

அம்புயமேசெம்பொற்கிளி நம்பிநான்அழைத்தசேதி
அன்புடனேயானுரைப்பேன் என்பெண்ணே கண்ணே அன்

பொன்னுருவி தரு

உரைத்திடும்வார்த்தைகளை திருத்தமாயெந்தனுக்கு
உண்மையென்னதானுரைப்பீர் எனதண்ணல் வண்ணல் உண்

கர்னன் தரு

அண்ணலெனும்துரியராசன் அவர்க்குமுடிசூட்டவேண்டி
அற்புதயேசித்திரமே என்பெண்ணே கண்ணே அற்புத

பொன்னுருவி தரு

சித்திரம்போல்என்னைவிட்டு தேன்மொழியாள்வார்த்தையை
சிங்கமேநீர்யெங்கப்போறீர் எனதண்ணல்வண்ணல் சிங்க

கர்னன் தரு

சிங்கம்போலயானுமேகி தேர்விசயன்தன்னைக்கொன்று
சேயிழையேவாரனடி என்பெண்ணே கண்ணே சேயிழை

பொன்னுருவி தரு

போகவேண்டாம்போர்க் களத்தில்பொல்லாதபிழைகள்வரும்
புண்ணியரே கனுமண்ணு என தண்ணல்வண்ணல் புண்ணி

கர்னன் கந்தார்த்தம்

கண்ணேஎனது கருங்குயிலே கர்ப்பிணியே
பெண்ணேஎனக்கு விடைதந்தனுப்பும்

தரு

பிடித்தசபதம்வென்றுநான் அர்ச்சுனன்பழி
போர்க்களத்தில் முடிப்பன்யான்
அடுத்தஜவரைக்கொன்று அம்புவியாள்வதற்கு
நொடிக்குள்ளேஎந்தன்கீர்த்தி விருதாயடித்துக்காட்ட பிடித்த

பொன்னுருவி கந்தார்த்தம்

அரியாமல்துணையா அர்ச்சுனர்க்கிருக்க அவர்பகையேன்
தெரியாமல்நீயும் தீயினில்மூழ்கினல்

தரு

சேதம்நமக்குண்டாகுமே படுந்துயரம்வாதை நமக்குவேண்டாமே
சூதன்கபடன்கிருஷ்ணன் தொழிலறியாமல் சென்றால்
வேதனைக்கிடமாகும் வேண்டாம்நீர்போகவேண்டாம் சேதநம

கர்னன் கந்தார்த்தம்

சிம்பத்துக்கானை யெதிர்செய்து வெல்லதிற மேயுண்டு
அம்புவிமதிக்க அறியாமல் கிருஷ்ணன்

தரு

அர்ச்சுனனின்றாலும்எதிரோ திரிமூர்த்திகள்ருத்திரனின்றாலும்நிக
திரிபுரத்திரிலோககமும் கிரிகளும் நீறுநீருக [ரோ
பரிகரித்திடுவேனிதோ சரிசரி பாருமிதோ அர்ச்சுன

பொன்னுருவி கந்தார்த்தம்

துஷ்டருக்குசிஷ்டபரிபாலனமா திருவுருஅவதாரம்செய்திருக்க
துஷ்டமுள்ளவார்த்தைகளைப் பேசவேண்டாம்

தரு

சுவாமிஅவரைக்கொல்வாயே மின்னும்அர்ச்சுனன்
வேணுநாதனைக் கொல்வாயோ
பூமியில்யிருக்கக்கொஞ்சம் பொறுத்துபார்த்திடவேணும்
உருக்கிகெருவத்தாலே உயிர்போய்விடுகவேண்டாம் சுவாமி

கர்னன் தரு

போபோபயித்தியக்காரி புத்திதெரியாமல்தூரி
சீபோதெந்தன்வீரம் கூருமறியாமல்
பேய்போலதுள்ளி பினததுருய் நீகெட்டாய் போபோ

பொன்னுருவி தரு

இப்போதுநான்சொல்வதேதற்காது துஷ்டபுத்தியால்கலைக்கார்க்காது
சொர்ப்பனம்வீணல்ல சொல்லுபழுதல்ல
நற்படிஎன்சொல்லை தள்ளிநடக்கவேண்டாம் இப்போது

கர்னன் தரு

நாடகம்கட்டிபலுக்குருய் பெண்ராக்ஷதிபோல்பேசிகுலுக்குருய்
தாடகைநீகற்ற சமர்த்தெல்லாம்பேசாதே
சங்கையில்லாமல்கையை யிங்குநீவீசாதே நாடகம்

பொன்னுருவி தரு

அர்ச்சுனனுக்கெதிராவீரோ சிம்பம்அதையறிந்து யானைபோகுமோ
மைத்துனர்கிருஷ்ணர் மாயவனிருக்கவே
கொஞ்சம்படைமாண்ட குற்றம்நீரறியாயோ அர்ச்

கர்னன் தரு

ஆரென்றுநீபேசிதுள்ளுருய் கொர்வமடங்காமலானுவம்கொள்ளுருய்
பிரசண்டகோளமும் புசிக்கின்றவனுமானானே
மிரட்டிபேசினுலுன்னை வெட்டுவேன்துண்டாக ஆரென்

பொன்னுருவி தரு

பாகைநிகரில்வாழும்வாசனும் சிலகாலம்வாழலாம்செகதீசரால்
தோகையென்வார்த்தைதள்ளி சுவாமிநீர்போனலே
சாவதுநிச்சயம்தப்பாது யான்சொன்னேன் பாகைநக

கர்னன் கவி

எத்தனையோவிதமுரைத்தேன் உந்தனின்பழும்யான்வெறுத்தேன்
சத்துருக்கள்மிகநகைப்பார்பேசவந்தாய் சமர்க்களத்திலுறவேது
[தள்ளுதள்ளு
வெற்றியுடன்கர்னனும்ரதமேயேற வெகுசேனைதளபதிஅநேகம்சூழ
சுத்தமுள்ளபொன்னுருவிமாதுதானும் துயரமுற்றுவிசனமதாய்
[புலம்புவாளே

கர்னன் வசனம்

இவ்விதமாக பொன்னுருவிமாது வார்த்தைகளைக் கேளாமல் கர்னமகாராசன் கடுஞ்சினமுற்று நால்வகைச்சேனை சூழ ரதமேறிக் கொண்டு யுத்தகளம் நடக்கின்றபோது பொன்னுருவிமாது புலம்புவது.

பொன்னுருவி கவி

ஐயையோதெய் மென்று அலறியேமண்மேல்வீழ்ந்து
தையலேத்தவிக்கவிட்டு சமர்க்களம்போனார்மன்னன்
கையையும்முரித்துக்கண்ணீர் கலங்கிநீர்சொரியவிட்டு
தையல்தாதியரைப்பார்த்து தயங்கியேபுலம்புவாளே.

பொன்னுருவி புலம்பல் தரு

அய்யய்யோபாவிதெய்வம் சதிதானே
அருமைமன்னரைவிட்டு பிரியவும்

சு அய்யோஎன்னுள்ளம் அங்கம்பதருதே
வெய்யோன்கதிர்முடி வேந்தனைக்காண அய்யய்

சண்டைக்குப்போகவேண்டா மென்றுஉரைத்தேனன்
தள்ளியெனைவிட்டுஅவர் கொள்ளையாய்போகிறார்

சு கண்டசொர்ப்பனம் யின்றுபலிக்குமோ
காரணமொன்றும் யானறிகிலேன் அய்யய்

கண்ணன்கிருஷ்ணனவர் எண்ணமுடியுமோ
காண்டீபன்சாத்தாலே மன்னர்மாண்டுமடிவாரே

சு காரணமொன்றும் யானறிகிலேன்
ஆரடிதாதி யென்னசெய்குவேன் அய்யய்

அந்தகன்மகனாலே எந்தன்குலம்போச்சே
சொந்தபுருஷன்கையை சோர்ந்துவிடவுமாச்சே

சு சூக்ஷமுடனதிகவஸ்து வாபரணம்
தொல்லுலகெங்கும் பூண்டமார்பனும் அய்யய்

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக பொன்னுருவிமாது புலம்பிவிட்டு தன்னுடைய அரண்மனை சேர்ந்து விசனமுற்று யிருக்க இப்பால் பூலோக தயாபரர் தர்மபுத்திர மகாராசன் சேனைகள்சூழ கொலுவுக்கு வருகின்றார்.

தர்மர் கவி

வெற்றியுடன்முரசுகொடி விருதுமோங்க
வெகுசேனை தளகர்த்தர் புடைகள்சூழ
சத்துருக்கள் மனம்கடுக்கம் எடுத்திட்ட
தரணிபதிஅரசர்களும் முடிகள்தாழ
பத்துமொருஎழாம்நாள் கர்னன்மேலே
படையெடுத்துபகைமுடிக்க வேணுமென்று
சுத்தமுள்ளஐவர்களும் கிருஷ்ணமூர்த்தி
தூரினார்ரணகளம்வந் தேறினாரே.

O-, 892 NVP3, N49
TAMIL NADU ARCHIVES LIBRARY No. 103813 EGMORE, MADRAS

தர்மர் தரு

திக்குதிசையும்நான்கும் வெற்றிபெற்றமர்செய்யும்
சத்துருசம்மார மூர்த்திவந்தனர்
வெகுசேனை தள கர்த்தர் புகழ்ந்தனர்
கையில்கடகமும் வாளும காண்டீபமேதாமரமும்
கத்திகேடயம் கெதைகொண்டனர்
வெற்றிமுரசுக் கொடிபூண்டனர்
அதிரதர்சமரதர் மகாரதர்துதிபெற
செயவீரரும் வந்து தேறினர் தங்கள்
மெய்மொழிதவருமல் மீறினர்
கண்ணனுகிய கிருஷ்ணன் யெண்ணமுடிப்பேன் என்று
கா க்தனும்வரக் கூடினர் கர்னன்
சபதம்முடிப்பே னென்றுதேறினர்
உடுக்கைபம்பை படவிலு கிடுகிடென்றுமுரசு
கடுகடுத்தமர்களம் அதிரவே சத்துரு
முடி பதரி எங்கும் சிதரவே
பத்தும்பதினேழாம்நாள் யுத்தகளத்தில்கர்னன்
அற்றும்விழவிருது கூறினர்
சித்திரசிலைகள் கையால்தேறினர் திக்

தருமர் விருத்தம்

மைத்துனதுஷ்டதூய்மா மன்னர்சேனுதிபா
நயத்துடன் ரணகளத்தில் நமதுசேனைகளைக்கூட்டி
வியப்படாயூகம்நன்ருய் வளைத்துநீநிறுத்திவையும்
இயல்பெரும்நமதுகிருஷ்ண தேவரை அழைத்துவாரீர்.

தருமர் வசனம்

கேளும் மைத்துன துஷ்டதூய்மனே! நமது சேனைகள் எல்லாம் அணிவகுத்து தயார் செய்துவிட்டு நமது குலதேவராகிய கிருஷ்ணமூர்த்தியை யழைத்துவாரும் மைத்துன துஷ்டதூய்மனே.

கிருஷ்ணமூர்த்தி கவி

திருமாதுமார்பலோலன் தேவகிபுத்திரசீலன்
தரணிபன் அர்ச்சுனர்க்கு சாரதியெனவிஸ்தாரன்
கரியமால்வாதாரயன் காவலன்ஐவர்க்கன்பன்
வருமுறை அறிந்துசொல்லும் மாயவன்வருகின்றூரே.

கிருஷ்ணன் தரு

திருவுமவதார மூர்த்தி நானேசிவகோடிகள்
சிருஷ்டிதிதி சங்காரன்தானே

அரவம்துயில்நாரணன் அமரர்தொழும்பூரணன்
தருமரையவர்க்குகாரணன் தனஞ்செயர்க்குசாரணன்
சு சத்தபாதாளம் மெத்தயேழுலோகம்
இத்தலங்களும் சுக்ஷியில்வைத்தேன் திரு

சோமுகாசூரனையும் கொன்றேன் இரணியனை
சூரர் அனேகரையும் வென்றேன்
தீமைராவணனையும் காலன்கஞ்சனைக்கூட
நேமகமாய்வதைத்த நீலமேனிகாகுத்தன்
சு நீலபூதகிசகட போசனம்
காலகோடனை சண்டம் செய்தவர் திரு

அரவக்கொடியோன் சேனையெல்லாம்யின்றொரு நாளில்
முரிய அடித் தொழிப்பேன் சொல்லால்
கர்னன்மோக்ஷமடைய காண்டீபன்செயமடைய
தேரும்பரியும்போச்சே செகமும்தருமர்க்காச்சே
சு வெற்றிமேன்மையும் வீரமும்கூறமுப்
சுத்தமாதவன் திருமலையாதவன் திரு

பாண்டகரில்வாழும் வாசன் நாராயணரை
பாதம்தனைதொழு தேன் நேசன்
வாகாஜவரைக்கார்த்து வரமும் அளிக்கவந்த
யேகபோக உல்லாசன் யிணையடியைத்தொழுதேன்
சு இந்திரதேவரும் இமையவர்மெச்சிட
வந்தவர்யிவர்தான் வடமலைராயர் திரு

## தருமர் விருத்தம்

சலுதியிலெழுந்தார்தருமர் தாளிணைமுடிமேல்கொண்டார்
உலவியபதினேழாநாள் யுத்தரங்கத்தில்தானும்
வெல்வதும் விடுவதாரை வெற்றிபோர்செய்வதாரை
சொல்லுவீர்எங்களுக்கு சூக்ஷமுமறியத்தானே.

## தருமர் வசனம்

சரணம் சரணம் சுவாமி! கோபால சூடாமணியே! இன்று பதினேழாநாள் யுத்தமானபடியால் யாரைவெல்லுவது? யாரை விடுவது அடியேன்களுக்குச் சொல்லி காத்தருள வேண்டும் கர்த்தனே.

## கிருஷ்ணன் விருத்தம்

பொறுமையில்மிகுந்ததர்மா பூபதிசொல்லக்கேளும்
கர்னனையின்றுநாளில் கண்டிப்பதுவேஉண்மை
துரியனும்தம்பிமார்கள் சிலரின்னம்இருப்பதாலே
உாமிகுவீமன்தன்னை உத்தமன்வரச்செய்வீரே.

### கிருஷ்ணன் வசனம்

கேளும் தருமபுத்திர மகாராசனே! இன்று பதினேழாநாள் யுத்தத்தில் கர்னனைக்கொன்று அர்ச்சுனனுடைய பகையை முடிப் பேன் மேலும் துரியன் தம்பிமார்கள் சென்றவர்போக நின்றவர் களை யொழிக்கும் பொருட்டாக மதகரியாகிய வீமசேனனை அழைப் பியும் தர்மநந்தனு.

### வீமன் கவி

தண்டமானங்கொண் டெழுந்தான்வீமன்
தரணிமலைநடுநடுங்கக் கோபங்கொண்டு
துண்டனவன் துரியன்முதல் தம்பிமாரை
தூக்கியரைந்திடுவனென்று பலமும்கூறி
கண்டகார்க்கோடனென விருதுபேசி
கதாயுதமும்சிலைவாளும் கையிலேந்தி
தூண்டரவம்போலெழும்பி வீமசேனன்
துளபமணிகிருஷ்ணர்முன்னே வருகின்றானே.

### வீமன் தரு

மண்டலமதிரயீரேழு மகிலம்தத்தளிக்க
சண்டமாருதம்போல்வீம சேனன் தரணிமேல் நடந்தான்
மலைகள்குலுங்கிடபுவிதனில் மரங்களசைந்திட
சிலைகளேந்தியேவீம சேனன் தீரனும்நடந்தான்
பங்கமழிக்குறேன் துரியன் பவுஷைகுலைக்குறேன்
எங்கேயவனென்றுவீம சேனன்எழுந்துவருகுறான்
மட்டிபையலவன்கெடு மோசமான துரோகியை
வெட்டியவனையும் எமனுக்கு விருந்துசெய்குறேன் மண்ட

### வீமன் வசனம்

சருணம் சருணமையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே! தங்களு டைய திருவடிகமலங்களுக்கு தீர்க்க வந்தனம். என்னை அழைத்த சங்கதி என்ன? தெரிவிக்கவேண்டுமையா சுவாமி.

### கிருஷ்ணன் கவி

வீரசிங்கத்தையொத்த வீமாவென்சொல்கேளும்
கூரமாய்துரியன்தம்பி கூட்டத்தார்இனிஇருப்போர்
நேரிட்டசபதம்போல நிருபரைஅதமேசெய்து
பாருக்குள்யாவர்மெச்ச பார்த்தீபாவருகுவாயே.

### கிருஷ்ணன் வசனம்

கேளும் மைத்துன வீமாகூஷி! துரியோதனனுடைய தம்பிமார் கள் சென்றவர்போக நின்றவர்களை உன் சபதம்போல் முடித்து வாரும் வீமசேனு.

### வீமன் வசனம்

அப்படியே நடக்க சித்தமாக காத்துக் கொண்டிருக்கிறேன் சுவாமி.

### கர்னன் விருத்தம்

நந்திமாலையையுணர்ந்த நரபதிஅரசேகேளாய்
அந்ததோர்விசையன்வீமன் அவர்களைக்கூடட்டாமல்
பந்தமாய்பிரித்துவிட்டால் பார்த்தனையின்றுநாளில்
சிந்துவேறுக்கியானும் க்ஷணத்தினில்வருகுவேனே.

### கர்னன் வசனம்

கேளும் தம்பி துரியோதனா! இன்று யுத்த ஆரம்பத்தில் வீமனையும் அந்த அர்ச்சுனனையும் ஒருவருடன் ஒருவர் கூடவொட்டாமல்படிக்கு காண்டீபனாகிய விசையனை செயித்து செயம் தருகின்றேன் தம்பி துரியோதனா.

### துரியன் விருத்தம்

ஆக்கரித்தெழுந்துஓடும் அதிவேகதூதரேகேள்
சாக்கிறதையிப்போ சலுதியில்அழைத்தாரென்று
ஓங்கியேதுர்ச்சாதனன்தான் ஒன்பதுதம்பிமாரை
சீக்கிரமாகயிப்போ சடுக்கெனஅழைத்துவாராய்.

### துரியன் வசனம்

கேளும் தூதர்களே! துர்ச்சாதனன் முதல் ஒன்பதுபேர் என் தம்பிமார்களை சீக்கிரம் அழைத்து வாருங்கள்.

### துர்ச்சாதனன் விருத்தம்

துடிபெரும்விருதுகாந்தன் துர்ச்சாதனன்அதிககோபன்
கடினமாய்தம்பிமார்கள் காளையர்புடைகள்சூழ
கெடிபெறஅதட்டிசிம்பம் கெர்ச்சனைகொண்டாப்போலே
பிடித்தவில்படைகளோடு புறப்பட்டுவருகின்றாரே.

### துர்ச்சாதனன் தரு

துர்ச்சாதனவீரசூரன் துரைமக்கள்புடைசூழ
கெர்ச்சித்துசிம்பம்போல் வாரானே கோபக்குரோதன்
கெடிபெறவேவந்துமேவினான் கோபக்குரோதன் கெடி

செக்கச்சிவந்தகண்ணும் தீபோல்பொரிபறக்க
பலகாவிதந்தங்கள்காட்டியே கோபக்குரோதன்
உக்கிரமுடன்வந்துமேவினான் கோபக்குரோதன் உக்கி

அன்னாளில்துரோபதையை அபிமானபங்கம்செய்தேன்
இன்னாளில்ஐவரைக் கொல்லுவேன் கோபக்குரோதன்
எதிரில்லாசிங்கம்போல் வாரானே கோபக்குரோதன் எதிரி

வீமனவனைக்கொன்றுவிருது முடிப்பேனென்று
கார்முகம்போலேவாரானே கோபக்குரோதன்
கண்டவர்கள் தானடுங்கவே கோபக்குரோதன் கண்டவர்

துர்ச்சாதனன் கவி

பந்தமாய்எங்கள் தந்தை பாதுகள்காப்பதர்க்கு
தந்தையைப்போலவந்த கமையனேநின்றுயிப்போ
சிந்தவேபாண்டவரிளை செயிப்பதுயின்றுநாளோ
எந்தனையழைத்தசேதி யின்னதென்றருள்செய்வாயே.

துர்ச்சாதனன் வசனம்

கேளும் அண்ணா! தந்தையைப்போல் எங்களை ஆதரிக்கப்பட்டவரே! எங்களை அழைத்த சங்கதி சொல்லும் அண்ணா.

துரியன் தரு

தம்பிமார்களே யிங்கேவாருங்கோள்
சாதுரியமொழி தன்னைகேளுங்கோள்
கும்பலாகவேநீங்கள் கூடியொருமுகமாய்
வம்பனவனைக்கொன்று வாட்டுவீர்ஓட்டுவீர் தம்

அர்ச்சுனன் தனித்திட செய்யுங்கள் வீமனை
அவனொருபுறத்திலே வையுங்கோள்
அச்சப்படப்போரீர் அரும்புலிபோல்பாய்ந்து
கொச்சை அவனைவென்று கொல்லுங்கோள் வெல்லுங்கோள் தம்

இன்றைக்குசபதம் முடிப்பீர்கள் வென்று
நாளைக்குஎன்பேர் எடுப்பீர்கள்
அன்றுசபையில்வீமன் அளித்தசபதமெல்லாம்
கொன்றுகெடுத்துவிட்டுகுலைத்து அப்புறம்போங்கள் தம்

துண்டனவனைக்கொன்று வருவீர்கள் நல்ல
துருசாசெலுத்தி கீர்த்திபெறுவீர்கள்
நிச்சயம்நான்சொன்னேன் நிலமைதப்பப்போறீர்
மச்சாவதாரனைமறுபடி கொல்லலாம் தம்

துரியன் வசனம்

கேளும் தம்பிமார்களே! வீமனை விசையனுடன் சேரவொட்டாமல் தனியே கொண்டுபோய் வீமனைக்கொன்று சபதத்தை முடித்துவாரும் தம்பிமார்களே.

துர்ச்சாதனன் தம்பிமார் கவி

அண்ணன் தன்வார்த்தைகேட்டு ஆக்கரித்தெழுந்துசீரி
திண்ணமாய்வீமன் தன்னை செயிப்பதுஎன்றுயெண்ணி
விண்ணுமண்ணதிரத்தாக்கி வீம்புகள்எல்லாம்பேசி
புண்ணில்கோலிட்டாய்போலப் புறப்பட்டுவருகின்றனே.

துர்ச்சாதனன் வசனம்

ஆகா வாரும் தம்பிமார்களே நமது தமையன் சொல்படிக்கு வீமனைக்கொன்று செயம் தரவேண்டும் தம்பிமார்களே.

துர்ச்சாதனன் தரு

அண்டர்நடுக்கவேபுவியில் அரசர்ஒடுங்கவே
கொண்டலாகவே தம்பிமார்கள்கூடிவருகிறார்
பங்கமழிக்குறேன்வீமன் பவுஷைகுலைக்கிறேன்
எங்கேஎன்றுமேதம்பிமார்கள் எழுந்துவருகிறார்
பாரதப்போரினில் நம்மிடபடையை யொழித்தவன்
வீரனவனையும்எமனுக்கு விருந்துசெய்குறேன்
ஆனைபுறவிகள்சேனாரதம் அடர்ந்துவாருங்கோள்
கானல்தீயதுபோல்இடித்து கடுகிவருவீர்கள் அண்டர்

துர்ச்சாதனன் வசனம்

கேளும் தம்பிமார்களே அந்த முறட்டுபையல் வீமசேனன் எங்கே யிருக்கின்றான் பார்த்து வாருங்கோள் தம்பிமார்களே.

கிருஷ்ணன் கவி

சங்காரவாளகிரிக்கொப்பான தைரியமுள்ளவீமா
மிக்கஉன்சபதம்பின்று வேர்தனை முடிக்கவேண்டும்
அக்கண துர்ச்சாதனன் தான் அதோவந்துயிருக்கின்றான்பார்
பக்கனபாய்ந்துநீயும் பலியிட்டுவருகுவாயே.

கிருஷ்ணன் வசனம்

கேளும் வீமசேனா? துர்ச்சாதனன் முதல் அவன் தம்பிமார் ஒன்பதுபேர்களும் அதோ வந்திருக்கிறார்கள் நீ ராசசபையில் இட்ட சபதத்தை முடித்துவாரும் வீமசேனா.

வீமன் கவி

துள்ளினான்யெகிரிவீழ்ந்தான் துடைகட்டிஎதிரேகின்றான்
மெள்ளவேஎந்தன்கையில் வீரனேசிக்கிக்கொண்டாய்
அள்ளியும்சதையும்ரத்தம் அடித்துயிர்குடிப்பேனனே
சள்ளனேபாழாகவேண்டாம் சண்டாளாமூடாபோடா.

வீமன் வசனம்

அடா வாடா துர்ச்சாதனா? உன்னை கொன்று என் சபதத்தை முடிக்கின்றேன் பாரடா மூடா.

வீமன் தரு

ஆகட்டும்மடப்பயலே உன்கொர்வத்தை
அடக்குறேன் என்கையாலே
பாகஸ்தனென்றென்னைப் பாராமல்செய்தது
போகட்டும்நீயிப்போ போருக்குவந்தாயோ
போக்கனேதுன் மார்க்கனே அடா
புத்திகெட்டமடையா சத்தியம் உனக்கேது ஆக

ராசசபையில்பெண்ணை நடுவில்கொண்டுநிறுத்தி
பேசினதுவுமிப்போ பிரீதிதந்திடவந்தாய்
பேயனேவெறி வாயனே அடா
பொல்லாதவனேயிங்கே நில்லாதேஓடிப்போ ஆக

துரோபதையை துயிலுரிந்த போது அண்ணன்
தருமத்துக்கடங்கினன் தாக்ஷண்யமாயிருந்தேன்
சட்டியேகாடு முண்டியேயிப்போ
சற்றுகிலும்தயவு வைப்பனேபாரடா ஆக

அரக்குமாளிகைதன்னில் சுரங்கமுடனேவைத்து
பெருக்கமாய்தீயிட்டாய் சிறுக்கிகள்மெச்சிட
பட்டியேகெட்டாய் மட்டியே
பேச்சிபோல்உன்னுயிர் அரைமூச்சில்முடிக்குறேன் ஆக

வீமன் கவி

எத்தனைவிதமுரைத்தேன் எதிர்த்துபேசாமல்நீதான்
மெத்தவூமையன்போல்நீயும் வீரம்கைவிட்டமூடா
சத்தியமில்லாப்பாவி சாமத்துரோகியனேஉன்னை
வெற்றிநான்கொள்ளவேணும் வேகமாய்எழுந்துவாடா.

வீமன் வசனம்

அடா வாடா துர்ச்சாதனா? எத்தனையோ விதம் எடுத்துச் சொன்னேன், ஊமையன்போல் பேசாமல் வாயை மூடிக்கொண்டுயிருக்கின்றாய், என்னுடைய சபதம்போல் உன்னைக் கொல்லுகிறேன் பாரடா மூடா.

தம்பிமார் கவி

ஆமடாமடையாஎங்கள் அண்ணனும்எதிர்பேசாமல்
ஊமைபோல்நிற்கும்போது உதரியேபேசவந்தாய்
வீமனேஉன்னைக்கொன்று விண்ணுலகேற்றிவிட்டால்
கோமகன் துரியன் தம்பி கூட்டத்தாராகுவோமோ.

தம்பிமார் வசனம்

அடா வாடா வீமசேனா? எங்களண்ணன் வாயைமூடி அசை வைத்திருக்கிறபோது எகிரிபேச வந்தாயல்லவா? நாங்கள் ஒன்பது பேரும் எதிர்த்தோம் நில்லடா வீமசேனா.

வீமன் தரு

அண்டபுவனம்கிடுகிடென்னவே வீமசேனன்
ஆக்கிரமித்து எழுந்துசீறினன் அண்ட

தம்பிமார் தரு

சீறிஎழுந்தவீமனைக்கண்டு தம்பிமார்கள்
சிங்கம்போலவே வந்துஎதிர்த்தனர் சீறிஎழு

வீமன் தரு

வந்தஅரசர்சேனை தளங்களைவீமசேனன்
வாரிகையால்போர் செய்தனர் வந்த

தம்பிமார் தரு

போர்முகாணசூரமன்னவர் தளங்களெல்லாம்
புத்துநாகம்போலே சூழ்ந்தனர் போ

வீமன் தரு

எழுந்நாதங்கள்புறவியானைகள் கோடானகோடி
எமலோகமதுநடுங்க சாய்ந்ததே எழுந்

தம்பிமார் தரு

சாய்ந்தஉடனேஒன்பதுபேர்கள் தங்கள்ரதத்தைமுடிக்கி
தனுவைவளைத்துவந்து எதிர்த்தனர் சாய்ந்

வீமன் தரு

எதிர்த்தஒன்பதுபேர்கள் தன்னையே மண்ணில்மடித்து
எங்கும்நிறைத்து மறைத்துவிட்டனர் எதிர்த்த

பொது வசனம்—தம்பிமார் ஒன்பதுபேர் மாண்டுவிட துர்ச்சாதனன் எதிர்ப்பது.

துர்ச்சாதனன் தரு

அதட்டிவில்லைப்பிடித்து கொடித்நானிரோ சூரனே
ஆண்மைகுலைந்திடகையால் விடுத்தனிதோ தீரனே
சு நேர்புறவிநான்கும் கூறுயிரண்டாகிடவே
காருதிரிசூலங்கள் சீரிவருகுதுபார்
காட்டிவிட்டேன் கணை பூட்டிவிட்டேன்
கைத்தலசிலையுடன் நத்திடும்படியாக அத

வீமன் தரு

துர்ச்சாதனனே கைச்சிலை யுடனிதோவந்தாயோ
சூரனேஎன்னெதிர்வாய் திறவாமலேநின்றாயோ
சு வெற்றிப்படுகளத்தில் தத்தித்தலையுருள
ரத்தப்பெருங்கடலில் முத்தும்முழங்கிடவே
மூட்டிவிட்டேன்சிலை நாட்டிவிட்டேன்
முந்தவேதேர்படைசிந்து சிந்தாகுதுபார் துர்

துர்ச்சாதனன் தரு

நாட்டைவிட்டுநடுகாட்டினி லோட்டிவிட்டதறியாயோ
ராசனேஎன்னெதிர்பேசு வதேதடா முறியாயோ
சு வீராதிவீரனே கூறுதே என்னுடனே
பாராயென்தீரமெல்லாம் நேராயடித்திடுவேன்
நெத்திடுவேன் உன்னை குத்திடுவேன்
நானிலமறியவே வானுலகேத்துவேன் நாட்

வீமன் தரு

துள்ளிதேரிலவனைஉள்ளே புகுந்துமெள்ளபிடித்தானே
தூக்கிசிகையைகையால் முரித்துதரையில்போட்டுமிதித்தானே

சு அந்தநாளேயில்யிட்ட தந்தசபதப்படி
பந்தயங்களேக்கூறி நிந்தைசெய்தனன்பாரீர்
நோக்கிவிட்டேன்மார்பைக் கிழித்துவிட்டேன்
நீலகண்டரவம்போலும் மாலுமறியவாதை தள்

### வீமன் கந்தார்த்தம்

பாவியைத்தள்ளிமார்பினைப் பிளந்துளமகிரிசேர்ந்து
ஆவியையொழித்துசபதமுமுடித்து அந்தரத்தலேவர்கள்துதிக்க
தூவியேமறையோர்மலர் மழைபொழியதொல்லுலகனேவரும்
காவியேகையால் உதிரமேஅள்ளி [வாழ்த்த

### தரு

சபதம்முடித்துஎழுந்தான் மனதில் கிருஷ்ண
தேவரைத்துதித்து புகழ்ந்தான்
தவமுனியோர்கள்பல புவனங்கண்டுநடுங்க
கவலேயொழித்துவீமன் யிவனேஎமன்கொண்டாட சபத

### கிருஷ்ணன் விருத்தம்

பதருநேவீமசேனு பழுதுகள்வந்துநேரும்
விதமதா உதிரம்வாயில் விட்டுயேகொப்பளித்து
சதிருடன்உமிழ்ந்தியானல் சபதமும்முடிந்துதிப்போ
நிதமதாய்செய்யுமென்ன நிருபனும்தேறினனே.

கிருஷ்ணன் வசனம்—கேளும் வீமசேனு? பதருதகாரியம் செ ருது. மனுஷர் உதிரத்தை மனுஷாள் சாப்பிட்டால் வெறிக்கொண்டு போய்விடும். ஆகையால் உதிரத்தை அள்ளி வாயில்விட்டு கொப்ப ளித்து உமிழ்ந்து விட்டால் சப்தம் நிறைவேறிவிடும் அப்படி முடித் துக்கொள்ளும் வீமசேனு.

வீமன் வசனம்—அப்படியே தங்கள் உத்திரவின் பிரகாரம் முடித்துக் கொண்டேனையா சுவாமி.

(பொது வசனம்)—தூதர் ஒடி துரியாசனுக்கு உன் தம்பி மார்கள் துர்ச்சாதனன் முதல் ஒன்பதுபேரும் மாண்டுவிட்டார்கள் என்று சொல்ல துரியன் ஆகமாய் துயரமுற்று புலம்புகின்ற விதம்காண்க.

### துரியோதனன் விருத்தம்

துணேவர்ஒன்பதுபேர்தம்பி துர்ச்சாதனனும்மாண்டான்
கனிஉடன்தூதரோடி சாவலர்க்குரைத்தபோது
மனமதுகுலேந்தான் துரியன் மண்ணிறமேலலறிவீழ்ந்தான்
யினிகுலம்போச்சுதென்று யேங்குவான்தேங்குவானே.

(துரியன் வசனம்)—ஆகா என் தம்பிமார்களா? எனக்குத் தயி ரியம் சொல்லி சமர்களம் சென்று வீமனேக்கொன்று வருகிறோ மென்று திடம்சொல்லிப் போனீர்களே, உங்கள் வீரத்தன்மை எவ் விதம் விட்டு மாண்டீர்கள் தம்பிமார்களே.

துரியன் புலம்பல் தரு

என்னசெய்வேன் தம்பிமார்களா யினி
ஏதுசெய்குவேன் தம்பிமார்களே
என்னசெய்குவேன் மன்ன உங்களை
பின்னம்செய்துமே புவியிலெறிந்தனன்
சு பிழையாச்சே இழிவாச்சே பழியாச்சே மொழியாச்சே என்

வீமனுக்கிறைகொடுத்தேன் கொடுத்ததல்லாமல்
பூமியும் கை கொடுத்தேன்
வீமனுங்களை எமன் போலதீமைசெய்தான்
சு தீங்காச்சே நீங்காச்சே பாங்காச்சே போங்காச்சே என்ன

துரியன் கவி

கனிந்துயேயமுதுவெம்பி காவலர்நிற்கும்போது
தினகரன்போலேகர்னன் சேதியேகேட்டெழுந்து
புனைமணிசல்லியபூபா பூட்டியேரதத்தைஓட்ட
அனைவரும்புகழத்தேர்மேல் அரசனும்புறப்பட்டானே.

(துரியன் வசனம்)—இவ்விதமாக துரியன் புலம்பி நிற்கின்ற போது கர்னமகாராசன் தேரிலேறி நடக்கின்றவிதம் காண்க.

கர்னன் விருத்தம்

அங்கர்கோன்மகாராசனெனும் புகழ்அண்டர்மகிழ்ந்திடவும்
ஆயிரம்சூரியகிரணம்போல் தேரினில்அரசனும்எழுந்தருள
வங்களசிங்களதுங்க மதங்களிர்வந்துநெருங்கிடவும்
மண்டலபூபதிதொண்டுசெய்தனைவரும் மாதர்நடம்புரிய
யெங்குமிவன்கையால்தானம் கொடுப்பதுயிங்கிரனுர்கிகயே
எரிமழுவேல்வாள்உண்டிவில்சக்கரம் பிடியுள்ளபாணமுடன்
தங்கரதப்பிரபைமீதினிலே கர்னராசனெழுந்தருள
சத்தியதீரன்உத்தமமாறன் சமர்களம்வந்தனனே.

(கர்னன் வசனம்)—ஆகா வாரும் மாமா சல்லியராசனே? சமர்களம் போகவேண்டும் தேரை அதிவேகமா நடத்தும் சல்லிய மகாராசனே.

கர்னன் தரு

தேரதுவேகமாக சாரதியும்நடத்த
தேர்பரியானை சேனைகளும்நெருங்க
காருலகம்புகழ் மாரிபொழியவே
கண்டதேவர்முதல் நின்றுஒடுங்கவே
சு கைதனில்கத்தி பிடித்திடும்தீரன்
கர்னபிஷேகரன் குடையவுதாரன் தேரது
பேருசிலைவளைத்து விருதுகொடிபிடிக்க
மேளமுரசுமல்லாரி முழங்கவே

கோளமுகடுபிரசண் டனும் தயங்கவே
துண்டனுகியஎமன் வந்துவணங்கவே
சு பார்த்தவரித்தல எத்திசையோர்களும்
சத்துருவாதைகள் தவிர்த்திடும்தீரன் தோரது

காண்டீபனைசெயித்து பூண்பேன்விருதுபெற்று
கண்ணனவர்மனதை குண்ணிடசெய்குறேன்
வேண்டிஎனை துதித்து வெட்கிநின்றோடினும்
விடுவனுஐவரை அடியோடே மடிக்குறேன்
சு பூட்டியகாட்டிய ஓட்டியதேர்படை
நூட்டிமையாகவே மேட்டீபன்வாரான் தோரது

வேதகிதநாதாந்த யோகசத நந்த
மேவுப்பாதைநகர் வாழ்விமலரரை யேதுதித்து
பூதகியேவுயிர்வாதை செய்ததீரன்
புண்ணியகமலங்கள் மறவாதநாதன்
சு பெச்சியஉச்சித நிச்சயதீரன்
மேலுலோகத்தார் புகழ்பிரதாபன் தோரது

கர்னன் விருத்தம்

தோரதுநடத்தும்சல்லியதீரனே சொல்லக்கேளாய்
நாற்புறம்நமதுசேனை நாகவியூகமாக
ஆரம்பம்செய்துவையும் அர்ச்சுனன்கிரீடியிட்போ
பேர்பெறயின்று நாளில் பிடிப்பதுசபதந்தானே.

(கர்னன் வசனம்)—கேளும் மாமா சல்லியமகாராசனே! நமது சேனைகளையெல்லாம் நாகவியூகமாக அணிவகுத்து தயார் செய்து வையும். இப்போது ரணபேரிகை முழக்கினால் இவ்விடம் அர்ச்சுனனும் கிருஷ்ணனும் வருவார்கள். நமது சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் சல்லியமகாராசனே.

(கிருஷ்ணன் வசனம்)—ஆகா கேளும் மாதவா! சீக்கிரம் அதி வேகமாகச் சென்று எனது மைத்துனன் விசையகாண்டீபனை உனது மைத்துனர் கிருஷ்ணமூர்த்தி அழைத்தாரென்று சீக்கிரம் அழைத்துவாரும் மாதவா.

அர்ச்சுனன் கவி

மதிகுலம்தனிலுதித்த மன்னவன்விசையபூபன்
சதிருடன்கிருஷ்ணமூர்த்தி தானுரைகேட்டெழுந்து
பதிபுகழ்கர்னராசன் பகையதைமுடிப்பேனென்று
கதிரொளிவதனமின்ன காண்டீபன்வருகின்றானே.

அர்ச்சுனன் தரு

தேவதேவர்மெச்சம்பூபன் சிற்றினனெனும்பிரதாபன்
தாவியிருபுறம்மாதர்கள் சாமரைபோட

தனஞ்செயன்                கொலுவதாகினான்
வில்விசையனாம்பார்த்தன்                விபர்சசுசைவுசாசு
நல்லப்பகண்டைகிருஷ்டனாம்                இதைபாடினார்
ராசக்கிரீடி                வந்தானே
பங்குனன்சுவேதவாகன்                பாரினில்ஒய்யாரன்கிருட்டி
சங்கத்தொனிபேரிபாடவே                அர்ச்சுனராசன்
சரசசல்லாபன்                வாரானே
கொரத்திநகரில்வாசன்                கூறும்வீராப்பநேசன்
உரைத்தார்எழுதசொல்லியே                பாலகிருஷ்ணரை
திரத்தால்எழுதிதந்தாரே                தேவதேவர்

## கிருஷ்ணன் விருத்தம்

சத்துருசம்மாரமுள்ள தனஞ்செயபூபாகேளும்
உத்ததேர்களத்தில்கர்னன் உகந்துவந்திருக்கிறான்பார்
வெற்றிநாம்கொள்ளவேணும் வேகமாய்ரதத்திலேறும்
பத்தியாய்படையைக்கூட்டி பாங்குடன்யேகுவோமே.

(கிருஷ்ணன் வசனம்)—ஆகா கேளும் அர்ச்சுனா! உன் பகையாளியாகிய கர்னன் அதோ ரணகளம் வந்திருக்கிறான் நாம் ரதமேறி சண்டைக்குப் போகவேண்டும் அர்ச்சுனா?

## அர்ச்சுனன் விருத்தம்

இந்திரமுனிவர்போற்ற ரிஷிகளும்ஆசிர்வாழ்த்த
சந்திரகுலத்துமன்னன் தனஞ்செயன்ரதமீதேற
சுந்திரகிருஷ்ணதேவர் சுருக்கினில்பரியைத்தூண்ட
பந்தயாய்கர்னன்முன்னே பார்த்தீபன்புறப்பட்டானே.

(அர்ச்சுனன் வசனம்)—தேவர்கள் போற்றும்படியாகவும் ரிஷிகள் ஆசிர்வாழ்த்தவும் ஸ்ரீகிருஷ்ணதேவர் ரதம் நடத்தவும் அர்ச்சுனராசன் ரணக்களம் நாடிவருகின்றான்.

## அர்ச்சுனன் தரு

திருமால்அரிகிருஷ்ண                தேவர்ரதம்நடத்த
தேர்விசையராசன்                அகின்மேல்புகழ்படைத்த
சு    தேவரும்திரு                மூவர்யாவரும்
    தேடியபாதன்கோடிப்                பிரதாபன் திரு
அனுமக்கொடிதுவசம்                பாலாயொலிக்கவே
அஸ்வகுதிரைநான்கும்                மேகம்போல்கெர்ச்சிக்க
க    சித்தியவித்திய                கின்னரர்நாரதர்
    பக்தியாகீதப்                பிரபந்தமோதவே திரு
அண்டர்கள்வந்துமே                தொண்டுசெய்துநடத்த
அமலனென்றவேதம்                அர்ச்சுனனும்துதிக்க

சு அகலம்பதினுலுலகமும் ஐவர்கள்
மகிமைகொண்டிட மனமதுகொள்ளவே திரு

பாகைநகரில்வாழும் ஆதிநாராயணரை
பார்த்தனும்தொழுதுமே பாரதம்முடிக்கவாரான்

சு காரணன்பரி பூரணசீலன்
கர்னமோக்ஷத்துக்கு இவனதிகாரன் திரு

கிருஷ்ணன் சிசபத்தியம்

வீரனேவில்விசைய தீரனேகேளும்நீ
விதமாகநால்வகை சேனையுளதும்
பாரதசக்ராவியுகமாக வளைத்திடும்
பதினேழாநாளிலே கர்னனிவனை
வேரறவெட்டியே வெல்லுவாய்சபதமும்
விடுங்கணைவில்லதை வளைத்துக்கொள்ளும்
தீரனும்சல்லியன் சாரத்தியம்செய்குருன்
சேனையுள்ளவர்களைத் திடமுமழிய.

முடுக்கு

சார்முகவில்லயதை கருதிபிடியும்
கணைகளைசோருமல் எடுத்துவிடுவாய்
தேர்முதல்சேனைகளை யொழித்துவிடுவாய்
சீக்கிரம்சேவகம் காட்டிதீர்த்துவிடுவாய்

(கிருஷ்ணன் வசனம்)—ஆகா கேளும் அர்ச்சுனு! சீக்கிரம் வில்லை வளைத்து சேனைகளை அதம் செய்துவிட்டு அதோ பார்த்தாயா கர்னன்வந்து இருக்கிறுன். சரமாரியாக பாணங்களை யெய்து கர்னனைகொன்று உன்னுடைய சபதத்தை முடித்துவிடும் அர்ச்சுனு.

அர்ச்சுனன் விருத்தம்

அரிகரியிதென்னபாவம் ஆச்சுதேதயிந்தகாலம்
திருவுளச்செயலோநான் முன்செய்தபாவங்கள்தானே
தருமனென்தமையன்மீது சரந்தனைத்தொடுக்கச்சொன்னீர்
கரமதுசோருதையோ கர்த்தனேஎன்னசெய்வேன்.

(அர்ச்சுனன் வசனம்)—அரிகரி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே இது காலம் எங்களை பாதுகாத்தீர் என்னபாதகம் செய்தேன்? இப்போது என் தமையன் தர்மராசன்பேரில் பாணம்தொடுக்கச் சொல்லுகின்றீர். நான் என்ன தப்பிதம் செய்தேன்? தங்கள் திருவுளத்திற்கு சம்மதந்தானு சுவாமி.

அர்ச்சுனன் தரு

என்னமாயமோசுவாமி யேதுமாயமோ
மன்னன்தருமர்மேல் சரம்வாட்டுமென்குறீர்

முப்பழி இதுவோ அயன் கற்பித்ததிதுவோ
எப்படியோ அறியேன் இதுயீசன் செயலிதோ
எந்தநாளுமே உயிரா எங்களை ரக்ஷித்தீர்
சிந்தைவேறதா சொன்ன சேதியறிகிலேன்
கர்ணனென்றெனை கணை பூட்டச்சொல்குறீர்
வர்மம் எங்கள் மேல் உமக்கு வந்ததேதையா
சாரநடத்தியோர் பாரதம்முடித்தீர்
காரணப்பொருளே வேத கண்ணனே சருணம் என்

## அர்ச்சுனன் விருத்தம்

நாரணனே நாற்பதிதன் பொருளே சோதி நாகசயனேத்திரனே அறியேனையா, பாரதப்போர் முடிக்கவந்த எங்கள் தன்னை பழிகாரனுக்கிவிட்டால் பஞ்சைநாங்கள், காரணம்போல் கலிகூத்து யிதுதான் கண்டோம் கர்த்தனே உனக்குபகை என்னசெய்தோம், தாரணியில் தருமரைநீர் கொல்லச்சொன்ன தாக்ஷிபெறவருள்செய்வாயே.

(அர்ச்சுனன் வசனம்)—அரிகரி! புண்ணியானந்த வஸ்துவே! பகையாளியாகிய கர்ணனைக் கொல்லவந்தோம். அவனைக் கொல்லாமல் என் தமையன் தருமபுத்திரனை கொல்லச் சொல்வது தர்மந்தானு? உமது திருவுளத்திற்கு சம்மதம்தானு? இதுவேளை தருமரைக் கொல்வதை நிறுத்தி மன்னிக்கவேண்டும் சுவாமி.

## கிருஷ்ணன் தரு

மைத்துனரே என்னு மயக்கமோ காட்டுறீர்
மன்னன் தருமரென்று கர்ணனை நாட்டுறீர்
சு மந்திரமாகவே கணைகளை பூட்டும்
வல்லவனுயிரை வில்லினால்வாட்டும் மை

## அர்ச்சுனன் தரு

என் தமையனும் நானும் எதிர்த்துபோர்செய்வது
எல்லாமுன் கிருபையால் யாங்களும்முய்வது
சு இந்திரதேவரும் நிந்தனைசெய்குவார்
பந்தயமோ யிது மாருட்டம்வேண்டாம் என்

## கிருஷ்ணன் தரு

கர்ணனைக்கொல்லச்சொன்னல் தருமரென்றுரைக்குறாய்
காரணமோ உனக்கு நேம்சபதமெல்லாம்
சு கைச்சிலைபாணமும் யிக்ஷணமேவிடு
செச்சையனை வெட்டி கூத்தனுக்கனுப்புவாய் கர்

## அர்ச்சுனன் தரு

வளைத்தாலும் வில்லு வளைப்படவில்லையே
வளைத்தபோதிலும் கணை தொடுக்கவும்வல்லையே

சு வஞ்சகம்யெந்தனை நெஞ்சினில்நினைக்குறீர்
பஞ்சமாபாதகம் அஞ்சிநீபார்த்தது வளை

கிருஷ்ணன் தரு

என்னசொன்னபோதிலும் யிதங்காமல்பேசுறாய்
இருக்கிறார்தருமரும் யிப்பவேகாட்டுறேன்
சு ஏழையர்நெஞ்சம்போல் தாழ்வுகள்பேசுறாய்
கோழைமனதினாலே கூடாதுபோவென்றீர் என்

அர்ச்சுனன் தரு

என்கண்ணில்கண்டாலல்லோ உன்சொல்லுமெய்யாகும்
இருக்கிறதருமரை யிப்போதுகாட்டவாரும்
சு கண்ணனே விண்ணவர் விண்ணியபோதனே
தண்ணியதாமரை தாளினைப்பணிந்தேன் என்

கிருஷ்ணன் கந்தார்த்தம்

காண்டீபனே உனக்கு செய்தேன்காலமெல்லாம்
கருத்தில் எண்ணிப்பாராமல் கருதிசொன்னாய்
பாண்டவர்க்குசெய்ததெல்லாம் விருதாவாச்சு
பகையாளியெதிரிக்கு கெலிப்புண்டாச்சு
தூண்வில்வளைத்துகணை தொடுக்கச்சொன்னாய்
சூதுமுதல்கபடனென்று சொல்லவந்தாய்
வேண்டாமென்சொலலை நம்புவீண்போகாது

தரு

விருதுநமக்குண்டாகுமே கர்ணனைக்கொன்றால்
துரியன்செயலும் போகுமே
அரசன்அவன்பகையும் அல்லாமின்றோடேபோச்சு
சேருங்களத்திலவன் சிவன்மடியலாச்சு விருது

அர்ச்சுனன் கந்தார்த்தம்

எத்துசித்துகற்றகல்வி யெல்லாம்கண்டேன்
ஏமாறிவிடுவனென்று எண்ணவேண்டாம்
சத்துருவர்கர்னனென்று தமையன்தன்னை
சரமீட்டிகொல்லுமென்று தாவுகின்றீர்
வித்தைபுத்திவிருது எல்லாம்வீணேயாகும்
மேன்மையென்றகுலமுழுதும் நாசமாகும்
சுத்தமுள்ளபரப்பிர்ம சோதிநாதா.

தரு

துணைவனைக்கொல்வதில்லையே உன்னிருமலர்
மனதில்மறவதில்லையே
அரவனவன்படையில் அடுத்துகைவிட்டாலும்நீ
நினைவன்உன்பாதமலர் இருபாதம்செகிவேறில்லை துணை

கிருஷ்ணன் விருத்தம்

தருமரைக்காண்பித்தால்தான் சஞ்சலம்நீங்குமென்று
உறமுள்ளதேர்நடத்தி உத்தமன் தனையழைத்து
இருவருமாகக்கூடி யிறையவன் தன்னைநாடி
வருவதைக்கண்டுதர்மர் அவர்மொழிகூறுவாரே.

(கிரு-வசனம்)—இவ்விதமாக அர்ச்சுனனுக்கு தர்மரைக் காண்பிக்கிறேன் என்று ரதத்தைத் திருப்பிக்கொண்டு தர்மராசனிடம் வருக, தர்மராசன் சுவாமியைக்கண்டு சண்டைக்குப்போனவர் ஏன் வந்தீர்கள்? செயம் அபசயம் என்னவென்று கேட்க சுவாமியானவர் தர்மராசனுக்குச் சொல்வது.

கிருஷ்ணன் சம்பை தரு

மகராசபோசந்திரா மன்னனெனும் தருமரைக்கேள்
செகமுழுதும் துதிபெறவே சீக்கிரத்தில்வந்தோம்

தருமர் சம்பை தரு

ஏகபரமானந்தா யிஷ்டவிக்கிரமதயாளா
நாசசயநேத்திரனே நாதனேயான்சருணம்

கிருஷ்ணன் சம்பை தரு

சத்யமும்வாழ்வும்பதி தம்பியரும்வம்மிசமும்
எத்தேசம்குறையாமல் யிருந்துமிகவாழ்வீர்

தருமர் சம்பை தரு

இருவருமாய்கூடியிங்கு வந்தவிதமறியேன்
கர்னனவன்மாண்டவிதம் கருத்துரைப்பீர்சுவாமி

கிருஷ்ணன் சம்பை தரு

கர்னனுக்குமுயிருகில காலமென்னயிருப்பதினால்
வர்னசிலைவளையாமல் வந்தோம்யிந்தவிடமே

தருமர் சம்பை தரு

இன்றுநாளில்அவன்மடியான் இதுகாலம்விட்டவனை
பண்டுசெய்தபழியாகும் பார்ப்பதென்னசுவாமி

கிருஷ்ணன் சம்பை தரு

அவனை இன்றுகொல்வதென்று அநேகவிதமாயுரைத்தேன்
கவலையுடன் தருமரென்று காண்டீபனும்வந்தார்

தருமர் சம்பை தரு

வந்திடவும்நொந்திடவும் வர்மமென்னடந்தனுக்கு
சுந்தரனேஎந்தனுக்கு சுகமுடனேசொல்லும்

(கிரு-வசனம்)—கேளும் ஓய் தருமநந்தனா எல்லா விஷயமும் உன் தம்பியாகிய அர்ச்சுனனைக்கேளும் தருமநந்தனா.

தருமர் விருத்தம்

இன்றையநாளில்கர்னன் யிறப்பதுநிசமிருக்க
பிண்டிகனும்நீயும் புறம்தந்துவந்ததென்ன
சண்டையில்புகழுப்கீர்த்தி சாமர்த்தியமுனக்கிருக்க
நன்றாகவந்தசேதி ஞாயத்தில்உரையும்தம்பி.

(தரு-வசனம்)—கேளும் தம்பி அர்ச்சுனு! கர்னன் இன்று மாண்டுபோவது நிக்ஷயமிருக்க, சுவாமியும் நீயும் புறந்தந்து வந்த தென்ன? அதை எனக்குச் சொல்லும் தம்பி அர்ச்சுனு.

அர்ச்சுனன் தரு

நாதாசருணம்தரும சிந்தைபோதா சருணம்
சீதரனும்யானும் தேரேறியே போனேம்
காதலாகயானும் கர்னனைக்கண்ணால்கண்டேன் நாதா
சிலையெடுபென்றார் வளைத்துக்கையில்
கணைதொடு மென்றார்
நிலையுங்குறியும்குணம் நின்று உறுத்திப்பார்க்க
நீரென்றுதாபித்து நின்றேன்மயக்கமுற்று நாதா
அதையிவரறிந்தார் கர்னனிவன்
வதைசெய்யு மென்றார்
பதருதேதமையன்மேல் பாணன்விடுகனென்றேன்
யெதிரியிவன்மேல் கணையெடுத்துவிடுமென்றார் நாதா
தடுத்ததையறிந்தார் மயக்கமாய் தரணிபாளன்றார்
குடையும்படையும்தேரும் கொலுவலங்காரம்கண்டேன்
அடியேனுக்குத்தாரம் அளித்துஅனுப்பும்அண்ணு நாதா

அர்ச்சுனன் விருத்தம்

இப்போதுஎனக்குவாக்கு இக்ஷணம்தந்தியானுல்
கொப்பெனசுவாமியானும் கூடியேயேகியங்கு
தப்பிலாகர்னன்தன்னை சாத்தினுலவனைமாட்டி
விற்பிடித்தவனைக்கொன்று வெற்றியாய்வருவேன்அண்ணு.

(அரு-வசனம்)—கேளும் அண்ணு! உமது பாதத்திற்கு அநேக சருணம் உமது திருமுகத்தைக்கண்டு சிந்தைதெளிந்தேன். இப்போது தாங்கள் வருத்தப்படவேண்டாம். எனக்கு விடைதந்தால் கர்னனைக்கொன்று உமக்கு முடிதரிக்கின்றேன் அண்ணு.

தருமர் விருத்தம்

நல்லதுவிசையபூபா ரணக்களபோரில்நீயும்
வல்லவன்கர்னன்தன்னை வதைக்காமல்வீடுவந்தாய்
உன்வில்லுதான்என்னவில்லு வீரம்தான்என்னவீரம்
சொல்லவும்வேண்டாமிப்போ ஞானேயேகிடாயே.

(தரு-வசனம்)—கேளும் தம்பி அர்ச்சுனு! படுகளத்தில் ஒப் பாரி உண்டோ! எதிர்த்தவனைக் கொல்லாமல் விட்டுவந்தாய் அல்

லவா உன் கையில் பிடித்ததுயென்ன? சொத்தைவில்லா? உன் வீரம் தான் என்னவீரம்? என்னுடனே சொல்லவேண்டாம் யெட்ட நடவும் தம்பி அர்ச்சுனா.

அர்ச்சுனன் விருத்தம்

அதும்பியேஎழுந்தான்கண்கள் அனலதாய்பொறிகள்சிந்த
மிதமில்லாக்கோபங்கொண்டு வில்லையுங்கைபிடித்து
பதரிஉன்னாவினாலே பழுதென்னைச்சொல்லவந்தாய்
இதோபாரும்கொல்வேனென்று யெழுந்தானேவிசையபூபன்.

(அர்-வசனம்)—ஆகா என்னை பழுதுசொன்னவர் பூமியின்கண்ணில் ஒருவருமில்லை அப்படிசொன்னால் அப்போதே கண்டிப்பேன் இப்போது என்னையும் என்வில்லையும் நீ பழுதுசொன்னாய் அல்லவா உன்னைக் கொல்லும்படிக்கு வில்லெடுத்தேன் பாரும் அண்ணா தர்ம பூபதியே.

அர்ச்சுனன் தரு

| | | |
|---|---|---|
| எந்தன்வில்லை | ஏளிதம் செய்தாய்நீ | |
| இமையவரென்றாலும் | விடமாட்டேன் | |
| உந்தனைக்கொன்று | அந்தகர்னனுக்கு | |
| உகந்து நான்பட்டம் | மகிழ்ந்து அளிக்குறேன் | |
| சு யுத்தத்திலே | வெற்றிபெற | |
| நித்தியகணை | சத்திக்கிறேன் | எங் |
| அண்டபகிரண்டங்களும் மதிகண்டங்களு மகிதண்டங்களும் | | |
| மண்டலவிண்டலம் | அப்புறம்போனாலும் | |
| கண்டிக்குறேன் | யிருதுண்டமதாகவே | |
| சு சிரிக்கணைபூரிக்குது | ஏரிக்கணைபாரிக்குது | எங் |
| காண்டாவனத்தகனம் | போலவே | |
| எந்தன் கண்முன்னே | உந்தனைச்செய்குறேன் | |
| ஏண்டா என்றெனை | கேட்பாரேயாமாகில் | |
| இப்போதவரையான் | தப்பாமல்கொல்லுவேன் | |
| சு ஏரிக்கணை தூரிக்குது | மேருகிரிநீருபெற | எங் |
| சண்டக்காய் உந்தன் தலை | சண்ட துண்டமதாகிடவே | |
| சிண்டு சிண்டாகிடவே | பிண்டிடச்செய்குவேனென் | |
| தெண்டதெண்டமென்ன | தேவர் தடுத்தாலும் | |
| சிக்கிரத்தில் நீறாக்கி | விடுகுறேன்பார் | |
| சு தேரிக்கணைவிரிக்குது | சிரிக்கணைமீரிக்குது | எங் |

கிருஷ்ணன் விருத்தம்

கடினமாவில்வளைத்து கணைதொடுத்தார்பரிக்க
சடுதியில்கிருஷ்ணர்கண்டு தனஞ்செயன்காலில்வீழ்ந்தார்

அர்ச்சுனன் விருத்தம்

துடிவுடன்காலில்வீழ்ந்த தோஷமேபொறுப்பீர்சுவாமி
அடிபணிந்துனதுபாதம் அன்புடன்சரணம்செய்தேன்.

(கிரு-வசனம்) கேளும் மைத்துனு தருமராசனைக் கொல்லு கின்ற கோபாக்கினி யென்னைக் கொன்றுவிடும் உனது பாதத்திற்கு வந்தனம் அர்ச்சுனு.

(அரு-வசனம்) சுவாமி அடியேன் என்னபாதகம் செய்தேனே? உனது பாதாரவிந்த கமலங்களுக்கு அடியேன் கோடிகோடி சரணம் செய்தேன் சுவாமி.

அர்ச்சுனன் தரு

ஆதிமாமறைமூலமாகிய அமரர்கோள்டணிநாரணு
சீதள சந்திரன்போல்முகசுந்தர தேவனேஎங்கள் பூரணு
தூதுபோனசெம்பாதமேகண்டு துன்பமேவிண்டோம்யின்பபூரணு
இந்தபுல்லருக்கேவல்புரிவதும் உந்தன்காரணம்நன்மனம் ஆதி

அர்ச்சுனன் அகவல்

அரிமாதவனே அமலசருணம்
சிறுவன்செய்த தீவினைமுதலாய்
பொறுப்பீர்இன்னம் பொன்னடிசருணம்
கர்னனைக்கொல்ல கருத்தருள்வீரே

(அரு-வசனம்) அரிகரி! மாதவா! அநேக சருணம் செய்தேன் யான்செய்த தீவினையெல்லாம் பொறுத்துக் கொள்ளவேணும் கர்த்தனே இனிமேல் கர்னனைக் கொல்லவேண்டுமே? தங்கள் சித்தம் எவ்விதம் சுவாமி.

கிருஷ்ணன் தரு

இனிஉன்னைமெச்சிக்கொண்டேன்
இப்போஉன்தீரங்கண்டேன்
எழுந்திரும்நடந்திடுவோம் விஜயபூபா
கர்னனைக்கொல்லச் சொன்னுல்
தருமராவ ரொன்றீரே
கலக்கம்தெளிந்துவாரும் விசையபூபா
இருவருமாகநின்றால் எதிர்ப்பவரொருவருண்டோ
இந்திரனும்சிகரோ விஜயபூபா
கரியமால்கிருஷ்ணரும் காண்டீபனிருவரும்
கலக்கம்தெளிந்துவாரார் விசயபூபன் இனிஉன்

(பொது-வசனம்) இப்படியாக வரப்பட்ட கிருஷ்ணர் அர்ச்சுனனைப் பார்த்து கர்னன் ஏதென்று சொல்வது.

கர்னன் தரு

பராத்தாமனேநிறைந்தா நீயும்மறைந்துபோனது
இடமெங்கே சொல்லும்
புரந்தரன் பிர்மாதிதேவர்கள்
பூட்டியபடைகளைக் கூட்டிவந்தீர்களே

சு பொல்லாதககாலமுஞ் சொல்லாமல்வந்ததோ
வல்லவீரியமுங்கள் மார்க்கத்தைப்பார்க்குறேன் பரங்

அந்தநாளிலே அர்ச்சுனன்என்கையில்
வந்துபங்கமடைந்து போனவன்
இந்தநாளிலே எந்தனைவெல்வது
இவனிடதீரத்தை யிப்போதேபார்க்குறேன்

சு சுந்திரனேஉந்தன் சூதுமறிவேனுன்
வந்திடுவீர்உயிர் தந்துமேபோவீர்கள் பரங்

ஆனைசேனை ரதங்களேறியே
அந்தமாகவே யெந்தனைக்கொல்லவே
எனேஎந்தனைக்கண்டு பயங்கொண்டு
எதிரில்நில்லாமல் கதரிஓடினீர்

சு மானயீனமும் யிப்போது கிருஷ்ணு
தீனதயாபரனென்று பேர்கொண்டாய் பரங்

கிருஷ்ணன் விருத்தம்

என்னடாகெருவம்கர்னு யெகிரிநீபேசவந்தாய்
சொன்னதுஎல்லாம்போதும் துள்ளாதேதுடிக்கவேண்டாம்
மன்னவாவிசயபூபா வளைத்துஉன்சிலையைப்பூட்டி
கர்னனைக்கொன்றுஉந்தன் சபதத்தைமுடித்திடாயே.

(கிரு-வசனம்) அடா கர்னு! துள்ளிப்பேசவேண்டாம், சற்றே போறும். அர்ச்சுனு! உன் கைவில்லை வளைத்து பாணங்களைப்பூட்டி கர்னனைக்கொன்று உன் சபதத்தை முடியும் அர்ச்சுனு.

அர்ச்சுனன் கந்தார்த்தம்

அண்டமும்நவகண்டமும் பிர்மாண்டம்
அகிலமும் கிடுகிடென்ன
சண்டமாருதம்போல்சீரி தனுவெடுத்தார்ப்பரித்து
துண்டனேஉந்தன்தேரை தூரகச்சேனையெல்லாம்
விண்டலம் சேர்ப்பேனென்று

தரு

வில்லதைவளைத்துப்பிடித்தான் கடுங்கனலாக
செல்லினிலே நிறுத்திவிடுத்தான்
வல்லசிங்கம்போலே கொல்லலி கொட்டியதும்பி
துள்ளியேவில்லை முரித்து சுட்டுகளமாக்கிடவே

சு தூரிடவும்மாரிடவும் மீருகணை போரிடவும்
சாரதிசல்லியன்பேரில் நூறுகணைபோருசெய்தான் வில்

கர்னன் கந்தார்த்தம்

கெட்டிகெக்கலிகள்கொட்டி நிமிஷத்தில்தொடையைத்தட்டி
வட்டவில்வளைத்துகையால் வாங்கியேபாணம்பூட்டி

கிருஷ்ணன்மேல்அநேகபாணம் கிரீடிதன்தேர்மேல்கோடி காட்டியே யானைசேனை.

தரு

கலங்கிடயடித்துகொடித்தான் குரும்பதினால்
தேர்களையடித்து முரித்தான்
வேலுமழுசூலமது மேலுலோகமதைவிட
நீலகண்டனைப்போலவே தூள்படஅடித்திடவும்

சு தீனிலமும்மானிலமும் வானுலோகமும்குமற
கானலாககர்னன்வெகுண்டு கண்கள்ரெண்டும்சிவந்து கலங்

அர்ச்சுனன் தரு

கர்னராசனேவந்து எதிர்த்திடவீரமா என்
காண்டிபத்தினில் பாணம்வருகுது கூறமா

சு கண்டகண்டமாதுண்ட முஞ்செய்குறேன்
மண்டையும்சிதரிட பிண்டமாஉய்குறேன் கர்ன

கர்னன் தரு

விசயனேநீயும் எதிர்த்துவந்திடபாரமோ
வில்லைவளைத்துபாணம் விடுத்தேன்சூரமா

சு திசைபுகழ்மன்னர் மெச்சிடசாடுவேன்
தீரனேநீயும் பிச்சிடஓடவும் விசை

அர்ச்சுனன் தரு

அச்சமில்லாமல் ஏதுஎன்னுடன்எதிர்த்திட
அமோகமாகபாணம் வருகுதுபதைத்திட

சு அறுக்குறேன்பாரிதோ தலையதுசிதரிட
நொருக்குறேன்படைகளை பதரிடகதரிட அச்

கர்னன் தரு

படையுடன்நீயும்என்னெதிர்வந்துநாடிட
பாணசரங்களைவிட்டிடவே முரிந்தோடிட

சு கடிகியமடிபட கொல்லுவேன்உந்தனை
காலனுக்கிரையாக வெல்லுவேன்சிந்தனை படை

அர்ச்சுனன் கந்தார்த்தம்

ஆக்கரித்தெழுந்து அண்டமும் நடுங்க
சீக்கிரத்தினில் சிலையதைப்பூட்டி
மாய்க்குறேன் உன்னை மண்டலமறிய
தாக்குறேன் படைகளை

தரு

சாடினானே அஸ்திரம் கோடிசாடினானே
நாடிப்படைகளெல்லாம் ஓடித்தலையுருள
வேடிக்கையாய்கர்னன் வெட்கிமனதுவாட சாடி

(பொது-வசனம்) இவ்விதமாக அர்ச்சுனன் கைபாணத்தினால் கர்னனுடைய சேனைகள் முரிபட்டுவிழ கர்னன் கையிலிருந்த வில்லு முதலானதும் முரிந்து அஸ்திரசஸ்திரமெல்லாம் போய்விட கர்னன் மனம்வாடிச் சொல்வது.

கர்னன் விருத்தம்

ஒருகணையும்கர்னனுக்கு உதகாமல்முரிந்திடவே யூதாரியாகி
திருவதனமுகம் கா கியனதுகளும் நடுநடுங்கிதிடுக்கிட்டேங்கி
அரிகரியேதிருமாலே உன்செயலேயாமென்றும் அறியேனின்னம்
சிறுபிள்ளைவிளையாட்டா என்னையுமேசெய்துவிட்டீர் சித்தம்தானோ.

(கர்னன்-வசனம்) அரிகரி ஸ்ரீநாராயணா! பரந்தாமா! சமராகிய யுத்த ஆரம்பத்தில் என் கையிலிருந்த அஸ்திரபாணமெல்லாம் ஒன்றும் உதவாமல் போய்விட்டதே, இதற்கு என்னசெய்வேன்? திருவுளமே.

கர்னன் தரு

எந்தன்கைபாணமெல்லாம் யிப்போமுரிந்துபோச்சே
இனிஎன்னசெய்யப் போறேன் திருவுளமே
ஒன்றும்துணையெனக்கு உதவாமல் செய்துவைத்தாய்
ஓகோயிக்கெதிக்காளானேன் யென்னசெய்வேன்

கர்னனென்றபேரும் கருத்து மழிந்ததையோ
கர்த்தன்செயல்தானோ அறிகிலேனே
பகையாளிகளும்யென்னைப் பார்த்து நகைக்கலாச்சே
பட்டபாடுகளெல் லாம்பாழாச்சே

துரியன்வெகுவாய் என்னைநம்பி இருந்தவர்க்கு
தீவினைசெய்து விட்டாய் நாராயணா
சாரதிசல்லியராச பூபதியேநீ
தயிரியமே யுரைப்பீர்தயவுடனே

(கர்னன்-வசனம்) ஆகா இன்று சமராகிய யுத்தத்தில் அஸ்திரங்கள் எல்லாம் உதகாமல் போய்விட்டது. தைரியமான வார்த்தைகள் சொல்லும் மாமா சல்லியராசனே.

சல்லியன் விருத்தம்

கர்னனேகேளுமிப்போ காண்டீபன்தன்னைக்கொல்ல
பன்னகநாகபாசம் பதமதாய்யெடுத்துநீயும்
துன்னியதூபங்காட்டி துன்மார்க்கனெதிரேநின்று
மன்னவன்மார்புலெக்காய் வாங்கியேவிடுகுவாயே.

(சல்லியன்-வசனம்) கேளும் கர்னமகாராசனே நீ யாதொன்றுக்கும் சஞ்சலப்படவேண்டாம் நான் சொல்லப்பட்ட வார்த்தையைத் தள்ளாமல்படிக்கு இதுகாலமாய் பாலூட்டி அர்ச்சுனனைக் கொல்லுகிறேனென்று வளர்த்து வருகின்ற நாகபாசத்தை எடுத்து

தூபதீப நைவேத்தியம் கொடுத்து அர்ச்சுனனுடைய மார்புக்கு லெக்காய் குறிப்புவைத்து விடும் இருவர் பகையும் முடிந்துவிடும் செயம்பெறலாம் மகாராசனே.

கர்னன் விருத்தம்

ஆக்கரித்தான்சீரியெழுந்து அம்புறாதூணிதன்னில்
இருக்கின்றநாகபாசம் யெடுத்துமேகர்னன்தானும்
திருக்குடன் ஆசாகார சாஸ்திரவிதங்கள்சொல்லி
உருக்கமாய்பூசைசெய்ய உத்தமன்யெடுக்கின்றானே.

(கர்னன்-வசனம்) இவ்விதமாக சல்லியமகாராசன் சொன்ன வார்த்தையைக் கேட்டு அம்புராகூட்டில் இருந்த நாகபாசத்தை எடுத்து தூபதீப ஆராத்தனை செய்து விடுகிற விதம்காண்க.

கர்னன் தரு

பூசைபுரிந்திடவேகர்னன் புன்னித உன்னிதமலரெடுத்து
ஆசைமந்திரம்சொல்லி அனுஷ்டானங்கள் அன்புடன்செய்து
அப்பாயென்செல்வக்கண்ணே அரவராசனே கேளும்சொல்வேன்
இப்போஅர்ச்சுனன் தன்னை யெமகரிக்கனுப்புவாய்என்னுடைய
[நாகா
தப்பாமல் என்சபதம்உன் சபதமுடித்து நீயிப்போவருவாய்
சர்ப்பராசனை புத்திகள்சொல்லி தாக்கிவிட்டார்கர்னனுமே

நாகம் தரு

அண்டம்நடுங்கு தேபுவிகள் அதிரத்தாக்குதே
கொண்டலாகவேபொரிகள் கொதித்தெழும்புதே
தண்டமானம் கொண்டெழும்பி தாவிப்பாயுதே
விண்டலத்து தேவரெல்லாம் விசனமடையவே
கண்டுமுனிவரும் அவர் கலங்கிவாடுறார்
செண்டுபோலயெகிரி நாகம்சீரிவருகுதே அண்

கிருஷ்ணன் விருத்தம்

கார்க்கோடன்சீரியேவிசயன் மீதுகர்ச்சித்து வருகுவதைகிருஷ் ணர்கண்டு, தேர்தன்னைபெருவிரலா லூன்றும்போது சீருடனேபணி ரண்டங்குலமழுந்த, பார்புகழும்விசயன்முடிதனையடித்து பலமுடை யநாகமது தான்திரும்பி, சீர்பெறவே கர்னனிடம் சென்றுபின்பு திரும்பிஎனைவிடுமென்று செப்பும்தானே.

(கிரு-வசனம்) அகோதெப்படியென்றால் நாகபாசமானது அர்ச் சுனன்பேரில் கெர்ச்சித்து வருவதை கிருஷ்ணமூர்த்திகண்டு தன் னுடைய பெருவிரலால் ரதத்தை பூமியில் பணிரண்டு அங்குலம் அழுந்தும்படி செய்ய, அப்போது நாகபாசம் அர்ச்சுனன் முடியை அடித்துத்தள்ளி கர்னனிடம்சென்று மறுதரம் விடுமென்று சொல் லுவது.

நாகன் தரு

இப்போதேனைவிடுத்தால் தப்பாமல்கொன்றுவாரேன்
இனியொருதரம்விடுவாய் ராசனே

கர்னன் தரு

கெட்டாய் நாகபாசமே என்கிட்டவாராதேபோபோ
உன்னை தொட்டுவிடுவேனோ சொல்நாகமே

நாகன் தரு

பாராளும் பாண்டவரை வேறுடனே கொண்டுவாரேன்
பதிலெடுத்துவிடுவாய் ராசனே

கர்னன் தரு

வெட்கமேதுஉனக்குஎன் கைக்கணையாயிருந்து
வீம்புமுடிக்காமல்போனாய் நாகமே

நாகன் தரு

எந்தன்சபதப்படிஅந்த அர்ச்சுனனைக்கொல்வேன்
இப்போஎனைவிடுவாய் ராசனே

கர்னன் தரு

முனைகுலைந்துஉன்னைநான் இனிவிடப்போகிறதேது
அனியாயம்செய்து விட்டாய்நாகமே

நாகன் தரு

அப்போதரவபாணம் வெட்கித்தலைகுனிந்து
அடித்துயிர்போச்சுதையோ அப்போதே

(பொது வசனம்) இவ்விதமா நாகபாசம் கர்னராசனிடம் மறு தரம் விடும்படிச்சொல்ல கர்னன் ஒரு கணைக்குமேல் மறுதரம் விட மாட்டேன் என்றும் உன்னையும் தொடமாட்டேன் என்று சொல்ல, அப்போது நாகபாசம் தேர்க்காலில் தன்சிரசை அடித்துக்கொண்டு உயிர்விட்டது அப்போது சல்லியன் கர்னனைப்பார்த்து சொல்வது.

சல்லியன் சவி

சதிகாரசாமத்துரோகி சண்டாளபயலேகேளாய்
அதிகாரிநாகபாணம் மார்லக்காய்விடவேசொன்னேன்
கதிகலங்கிடவேவிசையன் கழுத்துக்குலக்காய்விட்டாய்
இதோபாவிபோறேன்முகத்தில் இனியானும்முழிப்பேனோடா.

(சல்லி-வசனம்) அடா சண்டாளா! நான் அந்த நாகபாசத்தை அர்ச்சுனனுடைய மார்புலக்காய் குறிப்புவைத்து விடச்சொன்னேன் என்வார்த்தை தள்ளி கழுத்துலக்காய் விட்டாய், கபடன் கிருஷ்ணன் அர்ச்சுனனைக் காப்பாற்றிவிட்டான் நாகபாசம் மறுதரம்விடும்படி வேண்டியும் விடமாட்டேனென்றாய் நாகபாசமும் இறந்துவிட்டது அடாபாவி, இனி உன்முகத்தில் முழிப்பதில்லை நான் போய் வாரேன் ... ா கர்னா.

### கர்னன் கவி

எதுபோனால்வந்தாலென்ன என்வீரம்போய்விடாது
மதிசரியாயிருந்தால் மாமனும்போனாலென்ன
விதிவசம்பதினேழாநாள விசையனைக்கண்டிக்காவிட்டால்
கதிர்மகனாகுவேனோ கருத்தையும்மறிந்துபாரேன்.

(கர்-வசனம்) ஆகா நல்லது நாகபாசமும் இறந்துவிட்டது சல்லியனும் போய்விட்டான் எதுபோனாலென்ன இன்று பதினேழாம் நாளில் அர்ச்சுனனைக்கொல்வது நிச்சயம் ஆனால் இடகுல கிருஷ்ணனால் அத்தசவலப்பையல் அர்ச்சுனன் உயிர்பெறலாம் என்று இருக்கின்றான். நான் விடப்போகிறதில்லை அடா அர்ச்சுனா! கேவலமாகிய உன்னை இன்று கொல்லுகின்றேன் எதிர் நிற்பாயடா பயலே.

### அர்ச்சுனன் கவி

ஏதடாகர்னாநீயும் இகழ்ந்துமேபேசவந்தாய்
சாதனையாகவந்த தரணியாள் துரியனுக்கு
யோதவேராச்சியத்தை யுகந்துநீகொடுக்கவேண்டி
போதனை கருகலாமோ புத்திகெட்டவனேபோடா.

(அரு-வசனம்) அடா கர்னா! எங்களை இழிவாகப் பேசவந்தாய் நல்லது அந்த துரியனுக்கு இந்த ராச்சியத்தை நிலைநிறுத்தலாமென்று உன்னுடைய யோசனையிருக்கின்றது. அது முடியாது புத்திகெட்டவனே; எதிர்த்துவாடா கர்னா?

### கர்னன் தரு

தெண்டாயுதங்களெடுத்தான் கர்னனும் மீறி
மண்டியிட்டு மீரியடித்தான்
அண்டர்கள்வாடவும் கண்டுபயங்கோடவும்
அதலசுதலப்பட்டது ளெழும்பிசாடவும்
அமரர்முனிவரெல்லாம் சமையம்சமையமென்று
ஆரினால்மனம்கலங்கி தேரினான் கர்னனுமீறி தெ

### அர்ச்சுனன் தரு

வருணாஸ்திரம்யெடுத்தான் அர்ச்சுனன்மீறி
வந்துவந்து போகத்தடுத்தான்
தருணம் கருணமிது தாயாதிகர்னனையும்
தாக்கிடவேபோக அடித்தான் வெகுண்டெழுந்து
நோக்கியேசரத்தைப் பிடித்தான்
நொடியிலவனைக்கொல்ல படியிலரசர் மகிழ
கடிகியேதேரைவிட்டு அடியோடே தாக்கிடவே வரு

### கர்னன் தரு

அஸ்திர சஸ்திரமெடுத்தான் அமோகமாக
அதட்டியெழுந்து குதித்தான்

கஸ்தியடைய மன்னர் கலங்கிபயந்தோடவும்
கரிபரிசேனைரதம் அணியணியாய்சாடவும்
காலாளும்சேனைகள் ஓலமிட்டலறிடவே
ஆலகாலம்போலசிரி வாலவயதான கர்னன் அஸ்

## அர்ச்சுனன் தரு

திருமுகாஸ்திர மெடுத்தான் விசயனெழுந்து
வருகுதுபாரென்று தொடுத்தான்
பரிகரித்திடகர்னனை படுகளம்தன்னில்விழ
அரிகரியென்று தினம் அடியவர்பாதம்தொழ
ஆச்சுதேகர்னனுக்குவேளை மோக்ஷம்கொடுத்திடநாளை
ஆகாசெயமடைந்தேன் சோகம்வந்தடைந்திடவே
போகமுடையமாதர் புஷ்பமாரிதான்பொழிய திரு

(பொது வசனம்) இவ்விதமாக அர்ச்சுனன் விட்டபாணம் கர்னன்மேல் பாய்ந்து கர்னன் பூமியில்விழுந்து சோகமாகி புலம்புகிற விதம் எப்படியென்றால்,

## கர்னன் கொச்சகம்

அரிகரியேதிருவுருவே அனாதியென்மெய்ப்பொருளே
உரவணைமேல்துயின்ற ஓம் அரியேதிருமாலே
பரகெதிக்குசேர்ப்பதெப்போ படுகளத்தில்நான்விழவும்
திருவுளத்தின்செயலிதுவோ தீவினைக்குயென்னசெய்வேன்

## கர்னன் தரு

திருவேழுவுருவாகி உருவாயெழுந்தசோதி
சித்தம் வைத்தென்னைக் காப்பாய்அரிகரியே
பரிபூரணமெஞ்ஞானம் உன் பெருகும்திருவடியை
பாலனுன் காண்ப தெப்போ அரிகரியே
சூரியன் வெகுவாய் உன்னைநம்பிஇருந்தனைய்யோ
சோர்வையடைந்து மனம் வாடுதையோ
போகவேண்டாமென்றாள் பொன்னுருவி என்தேவி
சோகமடைந்துதையோ என் ஆவி
அரிகரி உன்செயல் அல்லால் வேறுமுண்டோ
அமர்களம் தன்னில் உதவி செய்வாருண்டோ
பச்சைநிற மேனியனே ஆதிமூலமே
பாதுகாரும் எனை வந்துயிந்தகாலமே
அகில மோரடியளந்த அச்சுதாமாயனே
ஆபத்தை தீர்க்கவேண்டும் நேயனே
மேலாம்பதம்தருகும் மண்ணையுண்ட கண்ணனே
மிகமகிழ்ந்தருள்தாரும் வண்ணனே திரு

கர்னன் கொச்சகம்

சாலோகசாமீப சாரூபசாயுச்சியம்
மேலாம்பதம்கொடுக்கும் மேவுநீலமேனியனே
நாலாவிதம்தருகும் நற்பதத்தின்மெய்ப்பொருளே
காலாதிகாலமென்னை காற்றருளும்திருமாலே.

(வசனம்) இவ்விதமாக கர்னராசன் அர்ச்சுனனுடைய பாணம் பட்டு பூமியில் சாய்ந்து துயரமுற்று கிடக்கின்றபோது கிருஷ்டன் பிராமண வேஷம்பூண்டு வருவது.

பிராமணன் கவி

அமர்களம்தன்னில்கர்னன் ஆயாசமாயிருக்க
சமயமேசமயமென்று சாரங்கபாணிநேயன்
உமையலக்ஷிமியைவிட்டு உருகியேபிராமணன்போல்
இமையவர்ரிஷிகள்போற்ற இன்பவேதியரும்வாரார்.

பிராமணன் தரு

எங்கெங்கும் தேடினேன் இடர்தனைதீர்ப்பவர் காணேன்
சங்கமர் போலவே சாரங்கபாணியும் வாரார்
அங்கதேசமாளும் அதிபெலகர்னனு மெங்கையோ
திங்கள் குலத்தில்வந்த தீரனைதேடியே சங்கையோ
உன்னிதமாகவே உத்தமதானங் கேட்டுவருகுவேன்
பன்னியபடி சென்று பாருலகறியவே தருகுவேன்
படுகளத்தில் கர்னன் படுத்திருப்பதை கண்ணால்கண்டேன்
திடமதா யாசகம்கேட்க அவரிடம் சென்றேன் எங்

பிராமணன் கவி

படுகளம் தன்னில்நீ பரிதாபப்படுமே
அடைவுடன் உமக்கு ஆசீர்வாதமே

கர்னன் கவி

விடுவனுன் உயிர்ப்பு வித்தகாவாரீர்
திடமதாய் உந்தன் திருவடிசருணம்

(பிராம-வசனம்) ஆகா மகாராசனே! ஆசீர்வாதம் உன்னையான் எங்கும் தேடிதிரிகின்றேன் கர்னமகாராசனே.

(கர்னன்-வசனம்) ஆகா பிராமணரே! உமக்கு அநேக சருணம் பகையாளியாகிய அர்ச்சுனனுடைய பாணம்விட்டு ரணகளத்தில் உயிர்விடப் போகிறேன் தாங்கள் என்னை தேடிவந்ததென்ன சொல்லும் சுவாமி.

பிராமணன் கவி

தேசாதிதேசமெல்லாம் திரிந்துநான்பிச்சைவாங்கி
வாசமேவடக்கேயாகும் வந்தசங்கதிநீகேளும்

நேசமாயுந்தன்கீர்த்தி நிபுணனும்பார்க்கவந்தேன்
கூசாமல்எனக்குதானம் கொடுத்தருள்புரிகுவாயே.

(பிராம-வசனம்) ஆகா கர்னமகாராசனே தேசமுழுவதையும் திரிந்து பிச்சைவாங்கி வந்தேன் நான் வடதேசம் உன்னுடைய கீர்த்தியானது தானத்தில் மிகுந்தவர் கர்னராசன் தவிர வேறே ராசர் யில்லையென்று கேள்விப்பட்டேன் ஆதலால் எனக்கு கொஞ்சம் தானங்கள் கொடும் கர்னராசனே.

கர்னன் கவி

அளகையில்போன்போலும் அளவற்றசெல்வம்பெற்றேன்
வளம்பெறஎந்தன்கீர்த்தி வாழ்வையும்அனேகம்உற்றேன்
தளம்பெற.அநேகர்உண்டு தானதர்மங்கள்செய்தேன்
இலகியபிராமணரே இங்கு எதைதானம்தருவேனையா.

(கர்னன்-வசனம்) கேளும் பிராமணரே! அளகாபுரி குபேரன் போல செல்வம்பெற்று அநேக தர்மங்கள் செய்தேன். இப்போது நான் பாணம்பட்டு குருக்ஷேத்திர பூமியில் கிடக்கின்றேன் என்ன தானம் கொடுப்பேன் பிராமணரே?

பிராமணன் கவி

அந்தநாள் தானம் அன்புடன் தந்தீர்
இந்தநாள் எனக்கதை இக்ஷணம் தருவீர்

(பிராம-வசனம்) ஆகா கர்னராசனே! நீ பூர்விகமாய் ஆதி முதல் செய்துவந்த தானதர்மங்களை பூராவும் எனக்கு தத்தம் செய்துகொடும் கர்னராசனே.

கர்னன் கவி

தானமும் கொடுக்க சலமில்லையிங்கே
ஊனங்கள் பட்டேன் உருகுறேன் அய்யா

(கர்-வசனம்) கேளும் பிராமணரே! அப்படி தத்தம் செய்ய சலம்கிடையாதே, நான் பாணம்பட்டு உடல் மெலிகின்றது என்ன செய்வேன் அந்தணரே.

பிராமணன் கவி

பாணத்தை அசைத்தால் பெருகிடும் குரிதி
வேணது வருகும் விடுப்பீரே தானம்

(பிரா-வசனம்) கேளும் கர்னராசனே! சலமில்லையென்று துயரப்படவேண்டாம், உன் மார்பில் உருகி இருக்கின்ற பாணத்தை அசைத்தால் ரத்தம் வருகும் அதை வாரி எனக்கு தத்தம் செய்யும் ராசனே.

கர்னன் கவி

நாணியை பிடிங்கிரத்தம் நான்வாரிதானம் தந்தேன்
ஊணியே பெற்றுமாயன் உத்தமர்மறைந்திட்டாரே

(கர்-வசனம்) இவ்விதமாக பிராமணர் தத்தம் வாங்கிக்கொண்டு மறைந்துவிட கர்னராசன் துயரப்படுவது.

கர்னன் தரு

வந்தமறையோர் போய் விட்டாரய்யோ வரம்தராமல்
வந்தமறையோர் போய்விட்டாரய்யோ
வந்தமறையோர் போய்விட்டாரே
சிந்தையது கெட்டாரையயோ
எந்தனுக்கு வரம்தராமல் அந்தணர் போலவந்து வந்

ஊண்உறக்கமில்லாபோனேனே சேவைதராமல்
உறகசயனு பாவியானனே
ஆணுவமாயகாமி அதையும் வெறுத்தேன்இன்று
சாணுடலம்தனக்கு சாலோகபதம் தாராமல் வந்

ஆவிவாடப்பாவியாகினேன் அமர்களத்தில்
கூவினேனே உன்னை போற்றினேன்
தேவிசொல்லைத் தள்ளிவந்து
திகைத்திடவே வைத்தாயின்று
பாவவினை தீராயின்று பார்ப்பாய் கடைக்கண்நன்று வந்

(பொது-வசனம்) இவ்விதமாக கர்னராசன் மறையோராகிய கிருஷ்டமூர்த்திக்கு தான் செய்துவந்த தானதர்மத்தை தத்தம் செய்ய, பகவான் அதை வாங்கிக்கொண்டு மறைந்துவிட கர்னராசன் துயரமுற்று யிருக்க கிருஷ்ணமூர்த்தியானவர் பிரசன்னமாகி கர்னனைப்பார்த்து சொல்வது.

கிருஷ்ணன் கவி

இன்னாளில் கர்னபூபா ஏதேனும் தானம்தந்தாய்
முன்னாளில் செய்தகர்மம் முடிந்தது யின்றோடுனக்கு
பின்னாளில் பிறவிநீங்கி பிறப்பாய்நீசிறுத் தொண்டனாகி
அன்னாளில் அன்னக்கொடிநாட்டி அப்போதுமோக்ஷம்தானே.

(கிரு-வசனம்) கேளுமப்பா கர்னராசனே! இந்த சென்மத்தில் உனக்கு மோக்ஷமில்லை இப்பிறவி நீங்கி மறுபிறவி பிறந்து திருச்செங்காட்டிற் சிறுத்தொண்டனாகப் பிறந்து அன்னதானம் செய்யப்போகின்றாய் அப்போது சாலோக சாமீப சாரூப சாயுச்சமென்னும் நாலாம்பதவி தருகின்றோம் இப்போது நான்வந்து உனக்கு சாக்ஷி தந்தேன் இதுவே மோக்ஷம் நான்போய்வருகின்றேன் கர்னராசனே.

(பொது-வசனம்) இந்தப் பிரகாரமாக பகவானனவர் கர்னராசனுக்குமுன் பிரசன்னமாகி மோக்ஷம்தர கர்னராசன் யுத்தபூமியில் உயிர்விட, அப்போது தூதுவர் ஓடி துரியராசனுக்கு கர்னன் மாண்டுவிட்டார் என்று சொல்ல துரியராசன் துயரப்படுவது.

### துரியன் கவி

என்னிடதமையன்கர்னன் இறந்திடவிதியுமாச்சு
நீசொன்னமொழிதனைஉறுதியாலே செங்கோல்நிலைநிற்குமென்று
மன்னவாஎன்னசெய்வேன் என்வர்மம்இன்றோடேபோச்சே
மின்னிய அனலில்விட்ட மெழுகுபோல்உருகலானேன்.

(துரியன்-வசனம்) ஆகா என் தமையன் கர்னராசன் சொன்ன வார்த்தையால் என் மணிமுடியும் செங்கோலும் நிலை நிற்குமென்று இருந்தேன் மாண்டுபோனாரே. இனி எனக்கு துணைவர் இல்லையே. பாவியாகிய இடகுல கிருஷ்டனாலல்லவோ நாகபாசத்தின் உறுதி போய்விட்டது. என்ன செய்வேன் தெய்வமே.

### துரியன் புலம்பல் தரு

அய்யோநான் என்ன செய்வேன் அண்ணாவே
அரும்பாவியான் ஆகினேனே அண்ணாவே
மெய்யும்பதறி கைகால் சோருதையோ
மேனியும்கருகிஉடல் வாடுதையோ
பாண்டவரைக் கொல்வே னென்று உறுதிசொல்லி
படுத்தாய் ரணகளத்தில் அண்ணாவே
தூண்டாமணிநாக அஸ்திரம் சூரமெங்கே
சொல்லிவந்தவீர மெல்லாம் தீரம்எங்கே
மணிமுடிசெங்கோல் அரசு அண்ணாவே
வைத்துபுவிஆளுவேனோ அண்ணாவே
இனிஎன்னசெய்யப் போறேன் அண்ணாவே
நாளைஎனக்குவரும் தீங்கறியேன் அண்ணாவே

(பொது-வசனம்) இவ்விதமாக துரியன் புலம்பிக்கொண்டு இருக்க இப்பால் கிருஷ்ணமூர்த்தியானவர் குந்திமாதேவியை அழைப்பிக்க குந்திமாதேவி வருவது.

### குந்திமாதேவி கவி

சூரசேனராசனீன்ற சொகுசுள்ளமாதுதானும்
சீருள்ளபணிகள்பூண்டு சிந்தையில்மகிழ்வதாக
பேர்பெறமக்களைவர் பொருந்தியயுத்தம்பார்க்க
தார்குழல்குந்தியம்மன் தையலும்வருகின்றாளே.

### குந்தியம்மன் தரு

சுந்திரஒய்யாரமாக சந்திரவதனரூபி
விந்தையாய்குருக்ஷேத்திரம் நாடிமெல்லியும்வாராள்
மக்கள் ஐவரைப்பார்க்க மாதுகுந்திமாதேவி
துக்கசாகரமோ வென்று சுருக்குடன் வாராள்

சேடியர் அருகில்சூழ சேலை துகிலணிந்து
நாடியே நடைநடந்து நங்கையும்வாராள்
பன்னகசயனனும்கிஷ்டன் என்னை அழைத்தவிதம்
தன்னையே அறிவேனென்று சடுதியில்வாராள் சுந்

(பொது-வசனம்) இந்தப் பிரகாரம் குந்திமாதேவி சபையில் வந்திருக்க அப்போது கிருஷ்ணமூர்த்தி சொல்வது:

(கிரு-வசனம்) கேளும் அத்தையே! உனக்கு முந்தி உதித்த கர்னன் அதோ படுகளத்தில் கிடக்கின்றான் பார்த்தாயா அத்தா!

குந்திமாதேவி கவி

முந்தியேஎனக்குதித்த முடிதரித்தாண்டகர்னா
இந்தரேணகளத்தில்நீயும் இறந்திடவிதியோபாலா
உந்தன்தன்தம்பிமார்கள் ஒருவரும்அறியார்முன்னே
வந்துதேதீம்புபாலா வகையொன்றும்அறியேனையோ.

(குந்தி-வசனம்) அடாபாலா! நான் கன்னிகழியாமுன் எனக்கு சிரேஷ்டமாகப் பிறந்தாய் இப்போது ரணக்களத்தில் உன் தம்பிமார் கைபாணத்தால் மாண்டாய். என் வயிறு எரியுதடா பாலகா.

குந்திதேவி தரு

அய்யோநான்என்ன செய்வேன்பாலகனே அப்பா
அருமையாக முன்பிறந் தாய் பாலகனே
வையகம் நகைக்கு மென்று பாலகனே அப்பா
வைகையாற்றில் விட்டோ மடா பாலகனே
எடுத்துஅந்தகன் வளர்க்க அப்பாமகனே
எங்கும்கெடிபெற்றாயோடா எந்தன் செல்வனே
அன்றுமுதல் இன்றளவில் என்கண்ணே கண்மணி
அறியாரேஒருவரும் என் அருமைபாலகா
தம்பிமார் அறிந்துவிட்டால் தமையனென்றுனை
உன்தாளினைப்பணிந்து ஐவர்சருணம் செய்குவார்
பெற்றவயிறெனக்கு பற்றிஎரியுதே பாலா
பேதைநான்என்ன செய்வேன் எந்தன்செல்வமே

கருமர் கவி

ஆதியேஅருளேஎந்தன் அன்னையாள்அழுவதென்ன
சோதியேஅதையெனக்கு சொல்குவாய்அறியநன்றாய்

வீமன் கவி

சூதிதுஅறியோம்அண்ணா துடித்துமேதாயார்காணும்
சீதராசொல்லாவிட்டால் கதையினால்சாடுவேனே

(தரு-வசனம்) கேளும் சுவாமி! அந்த கர்னன்மேல் விழுந்து என் தாயார் குந்திமாதேவி அதிக துயரமுற்று புலம்புவதென்ன அதைச்சொல்லும் சுவாமி.

(வீமன்-வசனம்) அண்ணு! சூதாகத் தோற்றப்படுகிறது. நமது தாயார் பாலகாவென்று கர்னன்மேல் விழுந்து அழுது புலம்புகிருள். அதுசங்கதி பகவானுகிய கிருஷ்ணமூர்த்திக்குத் தெரியும். சுவாமி! உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை சொல்லவேண்டும். அப்படி சொல்லாவிட்டால் கபடமாக இருந்தால் இதோ என் கதையால் உன்னை அடித்துக்கொல்வேன். கபடமில்லாமல் சொல்லும் சுவாமி.

(கிரு-வசனம்) கேளும் தர்மராசனே! ஓய் வீமசேனு! என்னை நீங்கள் கேட்பது ஞாயமல்ல எனக்கு ஒன்றும் தெரியாது. அந்த கர்னனுடைய வாலாறு தெரிந்தால் சொல்லிவிடுகிறேன், எல்லாம் உங்கள் தாயாராகிய குந்திமாதேவியைக் கேட்டுப்பார்ப்போம் வாருங்கள் பாண்டவர்களே.

குந்திதேவி தரு

எந்தன்பாலகாஎன்ன செய்குவேன் அப்பா மகனே
ஏங்கிஎன்மனம் தேங்கலானனே அடா செல்வமகனே

கிருஷ்ணன் தரு

பகையாளி கர்னன்மாண்டாலே ஓ அத்தையாரே
பதரிநீயும் அழுவதென்னமோ என் அத்தையாரே

குந்திதேவி தரு

ஒன்றும்தெரியா உளவனுச்சுதே திருடாகிருஷ்ணு
இன்றுஎந்தனைக் கேட்கவந்தையா அடா திருடாகிருஷ்ணு

கிருஷ்ணன் தரு

தெளிந்தும்தெரியா மர்மவார்த்தைகள் ஓ அத்தையாரே
பளிங்காமாகவெளி இடுகுவாய் என் அத்தையாரே

(கிரு-வசனம்) கேளும் என் அத்தையாரே! பகையாளி கர்னன் மாண்டுபோனதற்கு அதிக துயரமுற்று நீ அழவேண்டிய காரணம் என்ன? உன் மைந்தர் பாண்டவர் என்னை கேட்கின்றூர் எனக்குத் தெரியாதென்று சொன்னேன், உன்னைக் கேட்பதாக இவ்விடம் என்னை அழைத்துக்கொண்டு வந்தார். மர்மமான வார்த்தையை வெளியிடும் அத்தையே.

குந்திதேவி அகவல்

அப்பாஎன்பாலரே ஐவரேகேளீர்
செப்புறேன்யானும் திருவுளமகிழ்ந்து
என்னிடதந்தையார் இல்லறம்தன்னில்
வந்தனர்தூரு வாசருமங்கே

அவர்க்குநான்பணிவிடை அன்புடன்செய்தேன்
எனக்கவர்ஐந்து எழில்மந்திரம் செபித்தார்
அதிலொன்றையானும் அன்பாய் உச்சரித்தேன்
சூரியன்வந்தெனை சுகமுடன் அணைந்தார்
வீரியகர்னன் விந்தையா யுதித்தான்
பாரிலுள்ளோர்க்கு பழிப்பாகுமென்று
என்தந்தைபெட்டியில் எடுத்துமேவைத்து
விட்டிடவைகையார் வேகமாய் சென்றிட
அந்தகன்திருதராட்டிரன் அன்புடன்எடுத்து
சிந்தையுமகிழ சிறப்புடன் வளர்த்து
பட்டமும்தந்து பாரினை கர்னன்
ஆண்டிடஓர்குடை அரசனுமானான்
பாண்டவர்கையில் படுகளம்மாண்டான்
உண்மைஇதுதான் உரைத்திட்டேன் மக்களே

(கிரு-வசனம்) ஆகா வாருங்கோள் பாண்டவர்களே! என்னைக் கேட்டீர்களே உன் தாயார் சொன்னவார்த்தையைக் கேட்டீர்களா? பாண்டவர்களே உங்கள் அண்ணன்தான் கர்னராசன் இந்த அஸ் தினபுரியை நீங்கள்தான் ஆண்டு இருக்கின்றீர் தர்மராசனே.

தருமர் கவி

என்னிட அன்னையாரே இத்தனைநாளதாக
மன்னவன்கர்னராசன் உன்மகனென்றுசொன்னாலென்ன
வின்னமாபாணம்பட்டு விழுந்தபின்சொல்லவந்தாய்
பன்னகசயனுநாங்கள் பாபத்துக்காளாகினோமே.

(தரு-வசனம்) ஆகா என் அன்னையாகிய தாயே! இது நாளாக உன் மர்மவார்த்தையை வெளியிடாமல் உன் மகன் கர்னராசன் எங்கள் தமையனுச்சுதே! எங்கள் பாணத்தினால் படுகளத்தில் விழுந்த போது உயிர் துரந்தவுடன் நீ துயரப்படவும், நாங்கள் உன்னைக் கேட்டபிற்பாடு எங்கள் தமையனென்று சொல்லவந்தாய். ஆகா நல்லது சுவாமி! உமக்கு தெரிந்திருக்கு மல்லவோ? தாங்களாவது தயவுசெய்து உன்தமையன் கர்னராசனென்று தெரிவிக்கக்கூடாதா? இப்போது நாங்கள் ஐந்துபேரும் பாபத்துக்காளானோம், என்ன செய்யலாம் என் தம்பிமார்களா?

தருமர் தரு

தம்பிமார்களே என்னசெய்குவோம் கர்னராசனை
தமையனென் றறியாமல் போனோமே
தென்புகுலைந்து வாடலானனே என் தம்பிமார்களா
தியங்கு தென்வுள்ளம் என்ன செய்குவேன்
நாற்றிசையிலும் கீர்த்திபெற்றவா ஓ அண்ணா அண்ணாவே
போற்றி உன்பாதம் யான் தொழுதனே

முந்திபிறந்த எந்தன் தமையனே ஓ அண்ணா அண்ணாவே
முடிதரித்தரசாண்ட போகனே தம்பிமார்

கிருஷ்ணன் கவி

ஐவரேசொல்லக்கேளீர் அழுகவும்வேண்டாம்நீங்கள்
தெய்வத்தின்செயலேஅல்லால் தியங்குரீர்மனதுவாடி
வையகமுழுதும்கர்னன் வாரியேயிரைத்தான்தானம்
துய்யவேநீங்களாண்டீர் துரைமன்னதர்மபூபா.

(கிரு-வசனம்) ஆகா கேளுங்கோள் பாண்டவர்களே! நீங்கள் துயரப்படவேண்டாம் அயன்விதிப் பிரகாரம் நடக்குமேயல்லால் வேறில்லை, நீங்கள் சஞ்சலப்படவேண்டாம், நாடாண்டதும் நீங்கள், காடாண்டதும் நீங்கள், உன் தமையன் கர்னராசன் இந்த பூமண்டலம் மதிக்கும்படி தானதர்மங்கள் செய்துவந்தான். ஆதலால் மேலான புகழ்ச்சி உங்களதுவேயல்லாமல் வேறில்லை துயரப்பட வேண்டாம் தர்மபூபா.

(பொது-வசனம்) இவ்விதமாக புலம்பிக்கொண்டிருக்கிற பாண்டவர்களை பகவானனவர் தேருதல் சொல்லியிருக்க, இப்பால் பொன்னுருவிமாது தன் கணவன் கர்னராசன் மாண்டதை கேள்விப்பட்டு ரணக்களம் வந்து புலம்புகிறவிதம் காண்க.

பொன்னுருவி கவி

அய்யய்யோ பிராணநாதா ஆவியும் சோருதையோ
தையலாள் போகவேண்டாம் தடுத்திட ரதமேயேறி
செய்திட சண்டைதானும் நீர்செத்திட ரணக்களத்தில்
நையுதே யெந்தன்நெஞ்சம் நான்இனி யென்னசெய்வேன்.

(பொன்-வசனம்) ஆகா என் பிராணநாயகா! சண்டைக்குப் போகவேண்டாமென்று பலதரம் சொல்லித் தடுத்தேன், எனை மரித்து சமருக்குப் போனீர், பகையாளிகள் உன்னை கொன்றுவிட்டார்களே நான் என்னிட உயிரை எவ்விதம் வைத்து இருப்பேன்? என் பிராணநாதரே.

பொன்னுருவி தரு

அய்யோநான் என்னசெய்குவேன் என்
அரசனுமடிந்திட பிணமதாய் கிடந்திட அய்யோநான்
தையலேசகிமாரே என் தாலியிழந்தேனடி

சு தடுத்திடயானும் நடத்திட ரதமும்
கடுத்து கோபமாய் படுத்தாரேகளமும் அய்

மணமும் மஞ்சளுமிழந்தேன் என்னிட
மாலையும் ரவிக்கையும் சேலையாபரணம் மணமுமங்
குணமும் அவருடைய கொலுவையான்காண்பதெப்போ

சு கோதையாள் மனம் வாடி தவித்திட
பேதையாள் என்றெனை யெவரும் நகைத்திட அய்

எப்போஉன் சேர்வை காணுவேன் அய்யோ
மன்னவா உன்னிட உன்னிதவதனமும் எப்போஉனே
எப்போசிம்மாதனத்தில் இருப்பீர் அலங்காரமாய்

சு இலகியமணிமுடி அலங்கிர்த லோலா
உலகிய மெழுகுபோல் உருகுறேன் நாளா அய்

ஆரும்துணைவர் இல்லையே துயர்
ஆற்றவும் தேற்றவும் மாற்றவும்எனக்கு ஆரும்துணை
பாரும் படுகளத்தில் பாலகன்என் சுதனும்

சு பாதகன் துரியனால் வாதைகளானேம்
தீதுகளகற்றிட ஒருவரைகாணேம் அய்

(பொது வசனம்) இவ்விதமாக பொன்னுருவிமாது தன்பிள்ளை விஸ்வகேதுவும் தன் பிராணநேசர் கர்னராசன் மாண்டு போனதற்காக படுகளம்வந்து அழுதுக்கொண்டு அதிக துயரமுற்று இருக்கும் போது ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் பாண்டவர்களைப் பார்த்துச் சொல்வது.

கிருஷ்ணன் கவி

மைத்துன தர்மபூபா மாதுபொன்னுருவி யெனும்
உத்தமோர் களத்தில்நின்று ஓசைவிட் டழுகின்றாள்பார்
மெத்தவே சென்றுநீங்கள் மெல்லியாள் துயரகற்றி
சித்தமா யெந்தன்முன்னே சீக்கிரம் அழைத்துவாரீர்.

(கிரு-வசனம்) கேளும் தர்மபூபா! உன் தமையன் கர்னராசன் தேவியாகிய பொன்னுருவி மாதும் பாலகன் விஸ்வகேதும் அதோ ரணக்களத்தில் அழுகின்றார்கள் அவர் தயரத்தை மாற்றி என்னிட சமுகம் சீக்கிரம் அழைத்துவாரும் தர்மபூபனே.

தருமர் தரு

வாருமம்மா எந்தன் அண்ணியே துயரம்வேண்டாம்
வாருமம்மா எந்தன் அண்ணியே
பாரும் பாண்ட ர்கள் பஞ்சவர் ஐவரிருக்க
சீரும் செல்வம்உனக்கு சிறப்புடனேயிருக்க வாரு

பொன்னுருவி தரு

ஆரென்றும் யானறியேனே ரணக்களத்தில்
ஆரென்றும் யானறியேனே
பேரும்பெற பலமும் ஊரும் எனக்கறிய
கூறும் உனதுநாவால் தீரும்மனக்குறையை ஆரெ

தருமர் தரு

பாண்டுராசன் மைந்தர் ஐவர் என்பேர் தர்மன்
ஆண்டார் செங்கோல் என் அண்ணன் கர்னன்
மீண்டிடும் குந்தியர்க்கு முன் பிறந்தார் தமையன்
வேண்டாமென்று வைகைவிட்டார் அந்தசமையம் பா

பொன்னுருவி தரு

ஏனோஅப்படி செய்தாள் அதை யெனக்கு
எடுத்துரைப்பீர் உண்மை தனக்கு
நானேபழு தென்றெண்ணி நல்லசுகம் தாராமல்
வீணுமெலிந்து நின்றேன் வேந்தன் முகம்பாராமல் ஏ

(பொன்-வசனம்) ஆகா கேளும் என் மைத்துனமார்களே! உன் தாயார் குந்தியம்மனுக்கு முன்பிறந்த விபரம் நன்றாக தெரியச் சொல்லுங்கோள் மைத்துனமாரே.

(தரு-வசனம்) கேளும் அண்ணியாரே என் தாயார் குந்தியம்மனுக்கு துருவாசரால் ஐந்து மந்திரம் கிடைத்தது அதை குந்தியம்மன் செபிக்க சூரியபகவான் இச்சிக்க கர்னராசன் பிறக்க அவமானமென்று கன்னிகழியாதமுன் பிறந்தபடியால் பெட்டியில் வைத்து வைகை ஆற்றில்விட திருதராட்டிரன் எடுத்து வளர்த்து முடிசூட்டி அஸ்தினபுரி அரசனாக தானுதி கர்னபூஷணனென்று செங்கோல் செலுத்திவந்தார் அது சங்கதி இன்றுதான் தாயாரால் தெரியும் சுவாமி அழைத்தார் வாரும்தாயே.

பொன்னுருவி தரு

அய்யய்யோமன்னவா அறியாமல்போனேனே
ஆரும்துணை வரில்லை தெய்வமே
நையுதேயென் னுள்ளம் நான்பாவியாகினேன்
என்நாதர்திருமுகத்தை என்றுகாண்பேன் அய்

தருமர் தரு

பதரிஅழுகவேண்டாம் பாவையேஎன் அண்ணி
பாண்டவர் நாங்களிருக்கக் குறையேதோ
அதோயிருக்கின்றார்பார் அரிகிருஷ்ணதேவரும்
அவர்பாதம்சேவித்தால் சுகம்பெறுவாய் பதரி

பொன்னுருவி தரு

ஆதிமூலதாராசோதி சுடர்வடிவே
அடியாள் சருணம் செய்தேன்காருமே
சேதிதெரிந்திருந்தும் செய்யலாமாயிப்படி
செருக்களத்தில்என்புருஷன் மாண்டாரையோ ஆதி

## கிருஷ்ணன் தரு

எனக்குத்தெரிந்திருந்தால் யிப்படிநடவாது
என்மேல்பழி சொல்லாதே அம்மணி
தனக்குவந்தகுறை யெனக்கது யில்லையோ
தாயேதுயரகற்றும் கண்மணி என

(கிரு-வசனம்) கேளும் பொன்னுருவி மாதே உன்னுடைய புருஷன் கர்னன் பிறந்தவரலாறு எனக்கு தெரிந்திருந்தால் இவ்விதம் நடவாது பாண்டவர்தான் அஸ்தினபுரியை ஆளுகின்றார் என்று சும்மாயிருந்து விடமாட்டேனா? இன்று படுகளத்தில் கர்னன் மாண்டவுடன் என் அத்தைமகனே என்று புலம்பவும் பாண்டவர் என்னைக் கேட்கவும் நான் குந்தியம்மனைக் கேட்கவும் குந்தியம்மன் தன்னுடையபிள்ளை கர்னனென்று சொல்லவும் ஆதியோடந்தமாக கர்னன் பிறந்த வரலாரைக் கேள்விப்பட்டோம் அப்போதுதான் எங்களுக்குத் தெரியும் அயன்விதி முடிந்துவிட்டது துயரப்பட வேண்டாம் இனி உன் மைத்துனர் ஐவராசருக்கும் உன்னை கண்ணிமைபோல் பாதுகார்ப்பார் துயரத்தைமாற்றி இரும் அம்மணி வாருங்கோள் பாண்டவர்களே! கர்னராசனை சிம்மாதனமேற்றி மகுடம்சூட்டி நீங்கள் ஐவரும் கீழ்ப்பட தொண்டுபுரிந்து தோஷம் நிவர்த்திசெய்து தானதர்மம் நடத்தி மறுபடி கர்னராசனை அடைக்கலம் செய்துவிடுங்கள் பாண்டவர்களே.

## தருமர் தரு

தம்பிமார்களேவாரும் கும்பலாகதமையனைத்தூக்குவீர்
சிம்மாதனமேற்றி சிறப்புடன் மகுடத்தைச்சூட்டுவீர்
காளமுரசுடன்காகோளம் மகிழ்ந்திடவாத்தியம்
மேளம்சல்லரிபம்பை தாளமத்தள வீணைநேர்த்தியும்
இருபுறம்மாதர்நின்று வெண்சாமரைவீசவே
தருமரும்தம்பியர் அஞ்சலியாய் நின்றுபேசவே
தமையன்கர்னராசன் தானம்கொடுத்ததுபோலவே
இமையோர்மகிழ்ந்திடவாரி யிரைத்தனர்மேலவே
தேசமன்னரெல்லாம் கூடியேகும்பலாய்வந்திட்டார்
பாசமாய்தமையனைக்கொண்டுபோய் அடைக்கலம்செய்திட்டார் த

(பொது-வசனம்) இவ்விதமாக பாண்டவர் கர்னராசனை தமையன் எனறு தெரிந்து சிம்மாதனமேற்றி மகுடம்தரித்து தானதர்மங்கள் கொடுத்து கர்னராசனை அடைக்கலம் செய்துவிட்டு கயன்கிரிகளை நடத்தியிருக்க இதைக் கேள்விப்பட்ட பொன்னுருகுராசன் தன்மகள் பொன்னுருகு மாதுக்கு சீதன வரிசைகள் எடுத்துக்கொண்டு கொலுவாக வருகின்றார்.

### பொன்னுருவி கவி

மருமகன் கர்னராசன் மாண்டதோர் சேதிகேட்டு
உருகியே அனலில்விட்ட உலைமெழுகாகப் பொங்கி
கருகியே முகமும்வாடி கன்னிதன் மகள்தனக்கு
வரிசையும் யெடுத்துக்கொண்டு மன்னன் பொன்னுருகுவாரான்.

### பொன்னுருவி தரு

திசைக்கும்புகழும் கீர்த்தி தீரன் பொன்னுருகுராசன்
வசைக்கும் பிரபல்லியமாக வரிசை கொண்டு நடந்தான்
ஆரம்முத்து மாலையுடன் அணியும் தண்டை கொலுசு
பாரெல்லாம் மதிக்கும் ரத்தின பட்டுதுருசிட்டியுடன்
மாலை சரப்பளியும் மங்கையர்க்கு தங்க கடகம்
சேலைரவிக்கையுடன் சிலம்பொலியும் பாததண்டை
பச்சைக்கல் வயிரம்கெம்பு உச்சிதாரகம் தோடா
மச்சகம்போல்சடை கொப்பியும் மார்பதக்கம் சுங்கணமும்
சிவிசெனுக்கெடுக்க சீப்பு தங்கத்தால் கோடி
கூவிகூலாவிருக்க கோதைமார் அனேகம் கோடி
வெங்கலத்தால் சட்டிபானை வேணதுண்டு மகளுக்கு
தங்கத்தினால் அனேகபாண்டம் தையலுக்கு கொண்டுவாரேன்
சுத்திவந்து தீபமேற்ற குத்துவிளக்கும் கோடி
மெத்தை திண்டுமேசை பெட்டி வேணதுண்டு மகளுக்கு
கண்ணாடி பீரோ கைபெட்டி சாவியுடன்
என்னாளும் செலவழிக்க இரண்டுலக்ஷம் பொன்தருவேன்
வெள்ளியால் துடுப்புஆப்பை விதமாக மத்துகூண்டு
அள்ளியே சாதம்பொசிக்க அதற்குகிண்ணி தங்கத்தாலே
சின்னசம்பா நெல்விளைய பள்ளதாக்கில் ஐந்நூறுகாணி
வர்னசம்பா நெல்விளைய வாக்காலோரம் முந்நூறுகாணி
சாலையில் கறக்கும்பசு கன்றுடனே ஆயிரமாம்
அதை வேளையிலே கன்றுவிட விட்டனே ஆள்கள் நூறு
சின்னதோர் எருமைநாவு சீருடனே நூறுகன்று
பெரியதோர் எருமைகன்று பேர்பெற்ற ஒருநூறும்
இத்தனையும் பால்கறக்க பத்தியுடன் இதைகாச்ச
சுத்தமுள்ள பெண்கள் நூறு தோகையரே விட்டேனப்பா
உட்கார்ந்து மோர்கடைய மூக்காலிகள் பொன்னாலே
பக்குவமாய் நெய்யைகாய்ச்ச பானையது தங்கத்தாலே
கால்பிடிக்க தாதிகோடி கைபிடிக்க பெண்கள்கோடி

பால்ஊட்ட தோழிமார்கள் பாவையர் அனேகமுண்டு
சேலேதுவைத்து போட சேடியரைக் கொண்டுவந்தேன்
வேலேசெய்ய என்மகளுக்கு வேணபெண் கொண்டுவந்தேன்

(பொன்-வசனம்) ஆகா வாரும் என்மகளே! உன் புருஷன் இறந்துவிட்டபடியால் துயரம் வேண்டாம். நான் உனக்கு ஒன்றும் குறைவில்லாமல் வரிசை கொண்டுவந்திருக்கின்றேன் அதை ஒப்புக் கொள்ளும் என் மகளே.

பொன்னுருவி கவி

அன்புள்ள எந்தன்மாமி ஆசைமைத் துனரேகேளீர்
இன்பஎன் தந்தையாரும் இதோபாரீர் எனக்குஅன்பாய்
வந்தனர் வரிசைகொண்டு வாங்கிசந் தோஷமாக
சிந்தனை யில்லாமல்நீங்கள் சீருடன் ஒப்புக்கொள்வீர்.

(பொன்-வசனம்) கேளும் மாமியாரே! என் மைத்துனமார் களே! என் தந்தையான பொன்னுருகு ராசன் எனக்கு சீதன வரிசைகள் கொண்டுவந்து யிருக்கின்றார் நீங்கள் சந்தோஷமாக ஒப்புக் கொள்ளுங்கள் மாமி மைத்துனரே.

(தரு-வசனம்) அப்படியே யாங்கள் எல்லோரும் உனக்கு வந்த வரிசையை ஒப்புக்கொண்டோம் அண்ணியரே.

(பொது-வசனம்) இந்தப் பிரகாரமாக கர்னன் மாண்ட சங்கதி பொன்னுருகுராசன் கேழ்வியாகி பொன்னுருவிக்கு சீதன வரிசை கொண்டு வரவும் அதை ஒப்புக்கொண்டு பாண்டவர்களும் பொன் னுருகுமாதும் பாலன் விஸ்வகேதுவும் சுகவாழ்வை யடைந்தார். இப்பால் இந்த நாடகத்தின் கதையை கேட்டபேரும் பார்த்த பேரும் ஆடினபேரும் பாடினபேரும் தாளமத்தளம் சுதிக்கியான வித்துவான்களும் சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுஜ்ஜியம் என்று சொல்லப்பட்ட நான்காம்பதம் சேருவார் என்பதாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

183813
O-,892NVP3.5
N49

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை. 1949.

# ரிஜிஸ்டர் காபிரயிட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— கூடலூர் தாலுக்கா திருத்துறையூர் குறத்தி கிராமம் ம-ா-ா-ஸ்ரீ வை. வீரப்படையாட்சி அவர்கள் எழுதிய இந்தக் கர்னன் சண்டை நாடகத்தை ம-ா-ா-ஸ்ரீ C. A. சிவபூஷண முதலியார் மேற்படியாரிடம் சர்வ சுதந்தரமும் பெற்று, 1939-ஆம் வருஷத்தில் தன் சொந்தமான ஆனந்தா பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிட்டு தன் பேரால் காபிரயிட் செய்து அநுபவித்து வந்ததை, அடியிற் கையொப்பமிட்டுள்ள நான் ஷை C. A. சிவபூஷண முதலியாரிடம் 1949-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதியுடைய ரிஜிஸ்டர் கிரைய பத்திரத்தின் வாயலாய் சர்வ பாத்தியதையும் அடைந்து ஸப் ரிஜிஸ்டரார் ஆபீஸில் ரிஜிஸ்டர் செய்து நான் அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி என் பேரால் காபிரயிட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இதை மற்றவர்கள் அச்சிடக்கூடாது என்பதை இவ்வறிக்கையின் மூலமாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்படிக்கு

அ. இராஜரத்தின முதலியார்.